ஸ்ரீ[illegible]

JL
Z2 m,1071க
No9.
11,2384.

142389
JL



# இந்தியன் லா ரிபோர்ட்டுகள்

சென்னை இராஜதானியில் தமிழ்ப்பாஷை பயிலும் அனைவரும் வியவகாரநுட்பங்களை எளிதில் உணரும் பொருட்டுப் பிரசுரிக்கப்படும் மதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

புத்தகம் 1. } மாயவரம்:—1909 ளூ ஏப்ரல்மீ { இலக்கம் 2.

## அவதூறு. இ. பி. கோ. 499.

யாரொருவனுடைய பேராவது கெடுக்கவேணுமென்று எண்ணங்கொண்டாவது, அல்லது தான் செய்வதினாலே அவனுடைய பேருக்குக் கெடுதி உண்டாகுமென்று தெரிந்தாவது, நம்புவதற்கு ஏதுவிருந்தாவது, அவனைக்குறித்து வாய்மொழியாய்ப் பேசியாகிலும், பிறர் படிக்கும்படி எழுதியாகிலும், குறிகள் செய்தாகிலும், தெரியும்படியாக பாவனைகாட்டியாகிலும், ஏதாவது யாதொரு நிந்தனை செய்தாலும், பிரசுரித்தாலும், அப்படிப்பட்டவன் இதில் பின்னால் விலக்கப்படுகிற விஷயங்களில் தவிர மேற்படியான் அவதூறு செய்தவனென்று சொல்லப்படுவான்.

அர்த்தம் 1.—இறந்துபோன யாதொருவனை நிந்தித்தால் அது அவன் உயிரோடிருந்தால் அவனுடைய பேருக்குக் கெடுதி உண்டாக்கத்தக்கதாகவும், அவனுடைய குடும்பத்தார் அல்லது மற்ற சமீப பெந்துக்களுக்கு மனவருத்தமுண்டுபண்ண எத்தனப்பட்டதாகவுமிருக்கிற பட்சத்தில், இறந்துபோனவனை நிந்திப்பது அவதூறாகலாம்.

அர்த்தம் 2.—யாதொரு கட்டத்தார், சபையார், அல்லது சமுகத்தாரைக் குறித்து நிந்தனை செய்வது அவதூறாகலாம்.

அர்த்தம் 3.—குத்தப்பாடாகவாவது மறை பொருளாகவாவது நிந்திப்பது அவதூருகலாம்.

அர்த்தம் 4.—ஒருவனை நிந்திப்பது அவனுடைய ஒழுக்கத்தைக் குறித்தாவது, விவேகத்தைக் குறித்தாவது, மற்றவர்களுடைய எண்ணத்திலே நேராகவாவது ஜாடையாகவாவது தாழ்வுபடுத்துவதாயிராவிட்டாலும், அவனுடைய ஜாதியைக் குறித்தாவது தொழிலைக் குறித்தாவது அவனைத் தாழ்வுபடுத்துவதாயிராவிட்டாலும், அவனுடைய நாணயத்துக்குக் குறைவு உண்டுபண்ணுவதாயிராவிட்டாலும், அவனுடைய சரீரம் அருவருப்பான ஸ்திதியிலாவது சாதாரணமாய் அசங்கியமாக நினைக்கப்பட்ட ஸ்திதியிலாவதுஇருக்கிறதென்று நம்பும்படி செய்வதாயிராவிட்டாலும், அப்படிப்பட்ட நிந்தனையானது ஒருவனுடைய பேருக்குக் கெடுதிபண்ணுவதாக எண்ணப்படாது.

திருஷ்டாந்தம்

(1) ம—என்பவன் ந என்பவனுடைய கடியாரத்தைத் திருடினதுண்டென்று நம்பும்படி செய்யவேணுமென்கிற எண்ணத்தோடு, ம— என்பவன் யோக்கியன், அவன் ந என்பவனுடைய கடியாரத்தை ஒருபோதும் திருடினதில்லை" யென்று த என்பவன் சொல்லுகிறான். இது அடியில் வருகிற விலக்குகளிலெதிலாவது சேராதபட்சத்தில் அவதூருகும்.

(2) ந—என்பவனுடைய கடியாரத்தைத் திருடினவன்யாரென்று த என்பவன் கேட்கப்பட்டபோது அவன் ம— என்பவன் திருடினானென்று நம்பும்படி செய்யவேணுமென்கிற எண்ணத்தோடு ம— என்பவனைச் சுட்டிக்காட்டுகிறான். இது அடியில் வருகிற விலக்குகளில் எதிலாவது சேராதபட்சத்தில் அவதூருகும்.

(3) ம என்பவன் ந என்பவனுடைய கடியாரத்தைத் திருடினானென்று நம்பும்படிசெய்யவேணுமென்கிற எண்ணத்தோடு ம என்பவன் ந என்பவனுடைய கடியாரத்தை யெடுத்துக்கொண்டு ஓடுகிறபாவனையாக த என்பவன் ஒரு படம் எழுதுகிறான்; இது அடியில் வருகிற விலக்குகளிலெதிலாவது சேராத பட்சத்தில் அவதூருகும்.

முதலாம் விலக்கு :— அசேஷ ஜனங்களுடைய நன்மைக்காக சொல்லவேண்டியதாகவாவது பிரசித்தஞ் செய்யவேண்டியதாகவாவது, இருந்தால் யாவனொருவனைக்குறித்து உண்மையாகவிருக்கிற எதையாகிலும் வெளிப்படுத்துவது அவதூருகமாட்டாது. அசேஷ ஜன



ங்களுடைய நன்மைக்காக வெளிப்படுத்தவேண்டியதோ அல்லவோ யென்பது உள்ள சங்கதியைப்பற்றி யோசிக்கத்தக்கதாயிருக்கிறது.

இரண்டாம் விலக்கு :—சர்க்கார் அலுவலை நடத்துவதில் யாதொரு சர்க்கார் உத்தியோகஸ்தனுடைய நடத்தையைக் குறித்தாவது அவனுடைய குணத்தைக்குறித்து அதிகமாகச் சொல்லாமல் அந்த நடத்தையில் அது எவ்வளவு காணப்படுகிறதோ அந்தமட்டில் அவனுடைய குணத்தைக் குறித்தாவது நல்ல எண்ணத்தோடு, யாதொரு அபிப்பிராயத்தை தெரிவிப்பது அவதூருகமாட்டாது.

மூன்றாம் விலக்கு :—அசேஷ ஜனங்களுடைய யாதொரு பொதுசங்கதியைப்பற்றியதாயிருக்கிற யாவனொருவனுடைய நடத்தையைக்குறித்தாவது அவனுடைய குணத்தைக்குறித்து அதிகமாகச் சொல்லாமல் அந்த நடத்தையில் அது எவ்வளவுகாணப்படுகிறதோ அந்த மட்டில் அவனுடைய குணத்தைக் குறித்தாவது நல்ல எண்ணத்தோடு யாதொரு அபிப்பிராயத்தைத் தெரிவிப்பது அவதூருகமாட்டாது.

திருஷ்டாந்தம்.

அசேஷ ஜனங்களுடைய பொது விஷயத்தை குறித்து கவர்ன்மெண்டுக்கு விண்ணப்பம் எழுதிக்கொள்ளுகையிலாவது அப்படிப்பட்ட விஷயத்தைக்குறித்து சபைகூடும்படி கேட்டுக்கொள்ளப்பட்ட பத்திரிகையில் கையெழுத்து செய்கையிலாவது அந்தக்கூட்டத்திற்குத் தலைமையாயிருக்கையிலாவது அந்தக்கூட்டத்தில் வந்திருக்கையிலாவது அசேஷ ஜனங்களுடைய ஆதரணையைக்கேட்டுக்கொள்வதற்காக யாதொரு கூட்டம் கூடுகையிலாவது அந்தக்கூட்டத்தில் சேருகையிலாவது எப்படிப்பட்ட உத்தியோகத்தைச்சேர்ந்த அலுவலை சீராய் நடத்துவதிலே அது ஜனங்களுக்கு பிரயோஜனமுள்ளதாயிருக்குமோ அந்த உத்தியோகத்துக்கு வரவேண்டுமென்று கோருகிறவனைக்குறித்து தன் சம்மதியைத் தெரிவிக்கையிலாவது பிறருடைய சம்மதியைக் கேட்கையிலாவது ஒருவன் வேறொருவனுடைய நடத்தையைக்குறித்து நல்ல எண்ணத்தோடு யாதொரு அபிப்பிராயத்தை தெரிவிப்பது அவதூருகமாட்டாது.

நாலாம் விலக்கு :—நீதி விசாரணை நடத்துகிற யாதொருகோர்ட்டாருடைய நடவடிக்கைகளையாவது அதுகளின் முடிவையாவது அறிக்கை செய்வதற்காக எதார்த்தமான சங்கதியைப் பிரசித்தம் பண்ணுவது அவதூருகமாட்டாது.

அர்த்தம் :—நீதிவிசாரணை நடக்கிற கோர்ட்டில் குற்றங்களை ஆராய்வதற்கு முன்னமே கோர்ட்டில் பயிரங்கமாய் யாதொரு விசாரணை செய்கிற ஜஸ்டிஸ் ஆப் தி பீஸ் என்னும் அதிகாரியாவது வேறே யாதொரு அதிகாரியாவது மேற்படி பிரிவின் தாற்பரியப்படி கோர்ட்டாரெனப்படுவார்.

ஐந்தாம் விலக்கு :—நீதிவிசாரணை நடத்துகிற கோர்ட்டாரால் தீர்மானிக்கப்பட்ட யாதொரு சிவில் அல்லது கிரிமினல் வியாச்சியத்தின் தன்மையைக் குறித்தாவது அப்படிப்பட்ட வியாஜ்ஜியத்தில் கக்ஷிக்காரனாகவாகிலும் சாக்ஷியாகவாகிலும் ஏஜண்டாகவாகிலும், இருக்கிற யாவனொருவனுடைய நடத்தையைக் குறித்தாவது அவனுடைய குணத்தைக் குறித்து அதிகமாகச் சொல்லாமல் அந்த நடத்தையில் அது எவ்வளவு காணப்படுகிறதோ அந்தமட்டில் அவனுடைய குணத்தைக்குறித்தாவது நல்ல எண்ணத்தோடு யாதொரு அபிப்பிராயத்தைத் தெரிவிப்பது அவதூறாகமாட்டாது.

திருஷ்டாந்தம்.

1. "அந்த விசாரணையில் [illegible] சாக்ஷியம் ஒன்றுக்கொன்று விரோதமாயிருப்பதால் முட்டாளாகவாவது அயோக்கியனாகவாவது இருக்கவேண்டுமென்று நான் நினைக்கிறேன்" என்று த—என்பவன் சொல்லுகிறான். ம என்பவனுடைய குணத்தைப்பற்றி அதிகமாய்ச் சொல்லாமல் சாக்ஷி சொல்லுவதாகிய அவனுடைய நடத்தையில் அது எவ்வளவு காணப்படுகிறதோ அந்தமட்டில் சொன்னபடியினாலே த என்பவன் நல்ல எண்ணத்தோடு அப்படி சொல்லியிருப்பானாகில் அவன் இந்த விலக்குக்கு உட்பட்டவனாயிருக்கிறான்.

2. ஆனால் "ம என்பவன் எதார்த்தவாதியல்லவென்று எனக்குத் தெரியுமாகையால் அந்த விசாரணையில் அவன் சொன்னதை நான் நம்பவில்லை" யென்று த யென்பவன் சொல்லுவானாகில் ம யென்பவனுடைய குணத்தைக்குறித்து த யென்பவன் தெரிவித்த அபிப்பிராயமானது சாக்ஷிசொல்லுவதாகிய ம யென்பவனுடைய நடத்தையைப்பற்றியதாயிராதபடியால் த யென்பவன் இந்த விலக்குக்கு உட்பட்டவனாகமாட்டான்.

ஆறாம் விலக்கு :—யாதொரு கிரந்தம் பிரசங்க முதலியவை செய்கிறவன் தான் செய்த அப்படிப்பட்டதைக் குறித்து அசேஷ ஜனங்களும் பார்த்து அவர்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லும்படி வெளிப்படுத்திய அந்த கிரந்த முதலியவற்றின் தன்மையைக்குறித்தாவது அதைச்செய்தவனுடைய குணத்தைக்குறித்து அதிகமாய்ச் சொல்லாமல் அப்படி செய்யப்பட்டதில் அது எவ்வளவு காணப்படுகிறதோ அந்தமட்டில் அவனுடைய குணத்தைக் குறித்தாவது நல்ல எண்ணத்தோடு யாதொரு அபிப்பிராயத்தை தெரிவிப்பது அவதூறாகமாட்டாது.

அர்த்தம் :—யாதொரு கிரந்தம் பிரசங்க முதலானது வெளிப்படையாகவாகிலும் அதைச்செய்கிறவன் அசேஷ ஜனங்களுடைய அபிப்பிராயந் தெரியும்படி அதை வெளிப்படுத்தியதாக எதினால் குறிப்பாய்த்தெரியவருகிறதோ அந்தசெய்கையினாலாகிலும் அசேஷ ஜனங்களுடைய அபிப்பிராயந் தெரியும்படி வெளிப்படுத்தப்பட்டதாயிருக்கலாம்.

திருஷ்டாந்தம்.

(1) ஒருவன் யாதொரு புஸ்தகத்தை அச்சிட்டு வெளிப்படுத்தினால் அது அசேஷஜனங்களும் பார்த்து அவர்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லும்படி வெளிவிடப்பட்டதாகும்.

(2) ஒருவன் பயிரங்கமாய் யாதொரு பிரசங்கம்பண்ணினால், அது அசேஷஜனங்களுங் கேட்டு அவர்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லும்படி வெளிவிடப்பட்டதாகும்.

[illegible] ஒரு நாடகனாவது பாடகனாவது பயிரங்கமாய் ஆடினாலும் பாடினாலும் அது அசேஷஜனங்களும் அதைக்குறித்து அவர்களுடைய அபிப்பிராயத்தைச் சொல்லும்படி வெளிப்படுத்தப்பட்டதாகும்.

(4) ம என்பவனால் வெளிவிடப்பட்ட யாதொரு புஸ்தகத்தைக்குறித்து த என்பவன் அந்த புஸ்தகம் மூடத்தனமுள்ளதாகையால் ம என்பவன் புத்தியீனனாயிருக்க வேணுமென்றாகிலும், அந்த புஸ்தகம் அனாசாரமாயிருப்பதால் ம—என்பவன் பரிசுத்தமில்லாத மனசுடையவனாயிருக்க வேணுமென்றாகிலும் சொல்லுகிறான் ம—என்பவனுடைய குணத்தைக் குறித்து அதிகமாகச் சொல்லாமல் அவனுடைய புஸ்தகத்தில் அது எவ்வளவு காணப்படுகிறதோ அந்தமட்டில் அவனுடைய குணத்தைக் குறித்து நல்ல எண்ணத்தோடு த—என்பவன் அப்படிச் சொல்லியிருப்பானாகில் அவன் இந்த விலக்குக்கு உட்பட்டவனாயிருக்கிறான்.

(5) ஆனால் ம—என்பவன் புத்தியீனனும் தூர்த்தனுமாதலால் அவனுடைய புஸ்தகம் மூடத்தனமுள்ளதும் அனாசாரமுமாயிருக்குமென்பது ஆச்சரியமல்லவென்று த—என்பவன் சொன்னால் ம—என்பவனுடைய குணத்தைக் குறித்து த—என்பவன் தெரிவித்த அபிப்பிராயமானது

ம என்பவனுடைய புஸ்தகத்தைப் பற்றியதாயிராதபடியால் த என்பவன் இந்த விலக்குக்கு உட்படட்டவனாகமாட்டான்.

ஏழாம் விலக்கு:—வேறொருவன்பேரில் செலுத்தும்படி சட்டப்பிரகாரமாவது, அந்த வேறொருவனிடத்தில் சட்டப்படி செய்து கொள்ளப் பட்ட யாதொரு உடன் படிக்கைப் பிரகாரமாவது, தனக்குண்டாகிய அதிகாரத்தைச் செலுத்துகிறவன் அந்த அதிகாரமெதற்குச் சம்பந்தப்படுகிறதோ அப்படிப்பட்ட விஷயங்களில் அந்த வேறொருவனுடைய நடத்தையைக்குறித்து நல்ல எண்ணத்தோடு கண்டிப்பது அவதூறாகமாட்டாது.

திருஷ்டாந்தம்.

ஒரு ஜட்ஜியானவர் ஒரு சாக்ஷி அல்லது கோர்ட் உத்தியோகஸ்தனுடைய நடத்தையைக்குறித்து நல்ல எண்ணத்தோடு கண்டிப்பதும் யாதொரு இலாகா தலைவரானவர் தன்னுடைய கட்டளைக்குட்பட்டவர்களை நல்ல எண்ணத்தோடு கண்டிப்பதும் ஒரு தந்தையானவர் மற்ற பிள்ளைகளுக் கெதிரிலே தன் பிள்ளையை நல்ல எண்ணத்தோடு கண்டிப்பதும் ஒரு பிள்ளையின்பேரில் அவனுடைய தந்தைக்கிருக்கிற அதிகாரமான[illegible] அவன் பள்ளிக்கூடத்துக்கு அனுப்பப்படுவதினாலே உபாத்தியாயருக்குண்டாயிருப்பதால் அந்த உபாத்தியாயரானவர் மற்ற பிள்ளைகளுக்கெதிரிலே அந்த பிள்ளையை நல்ல எண்ணத்தோடு கண்டிப்பதும் ஒரு [illegible]ன் ஒரு வேலைக்காரனை வேலைசெய்யாமைக்காக நல்ல எண்ணத்தோடு கண்டிப்பதும் ஒரு சாவுகாரானவர் தன்னுடைய ஸ்ராப்பை அவனுடைய நடத்தைக்காக நல்ல வெண்ணத்தோடு கண்டிப்பதும் இந்த விலக்குக்கு உட்பட்டதாயிருக்கிறது.

எட்டாம் விலக்கு:—எந்த விஷயத்தில் யாவனொருவன் பேரில் குற்றஞ் சாட்டப்படுகிறதோ அந்த விஷயமாய் அவன்பேரில் சட்டப்படி அதிகாரமுடையவர்களில் எவருக்கு முன்பாகவாவது நல்ல எண்ணத்தோடு அவன்பேரில் குற்றஞ்சாட்டுவது அவதூறாகமாட்டாது.

திருஷ்டாந்தம்.

ஒருவன் மாஜிஸ்டிரேட் முன்பாக நல்ல யெண்ணத்தோடு வேறொருவன்பேரில் குற்றஞ்சாட்டினாலும் ஒரு வேலைக்காரனுடைய நடத்தையைக் குறித்து அவனுடைய யஜமானனிடத்திலே நல்ல யெண்ணத்தோடு பிராதுசெய்தாலும் ஒரு பிள்ளையினுடைய நடத்தையை[illegible] அவ



னுடைய தகப்பனிடத்திலே நல்லயெண்ணத்தோடு பிராதுசெய்தாலும் அப்படிச் செய்கிறவன் இந்த விலக்குக்கு உட்பட்டவனாயிருக்கிறான்.

ஒன்பதாம் விலக்கு:—ஒருவன் வேறொருவனுடைய குணத்தை நிந்தித்தால் அது அப்படி நிந்திக்கிறவனுடைய பிரயோசனத்தை யாவது யாவனொருவனுடைய பிரயோஜனத்தையாவது காத்துக் கொள்வதற்காகவாகிலும் அசேஷஜனங்களுடைய நன்மைக்காகவாகிலும் நல்ல எண்ணத்தோடு அப்படி செய்யப்படுகிற பட்சத்தில் அவதூறாகமாட்டாது.

திருஷ்டாந்தம்.

1. ஒரு கடைக்காரனானவன் "ம— என்பவனுடைய குணத்தைக்குறித்து எனக்கு நல்ல அபிப்பிராயமில்லாதபடியினாலே ரொக்கங் கொடுத்தாலொழிய அவனுக்கு சரக்கு விற்கவேண்டாம்" என்று தன்னுடைய வர்த்தகத்தை நடத்துகிறவனுக்குச் சொல்லுகிறான். அந்த கடைக்காரனானவன் தன்னுடைய சொந்தப் பிரயோசனத்தைக் காத்துக்கொள்ளுவதற்காக ம— என்பவனை நல்ல எண்ணத்தோடு அப்படி நிந்தித்திருந்தால் அவன் இந்த விலக்குக்கு உட்பட்டவனா யிருக்கிறான்.

2 ஒரு மாஜிஸ்ரேட்டானவர் தனக்கு மேலான அதிகாரிக்கு ரிபோர்ட்டு எழுதுகையில் ஒருவனுடைய குணத்தை நிந்தித்தெழுதுகிறான் அசேஷ ஜனங்களுடைய நன்மைக்காக நல்ல எண்ணத்தோடு அப்படி [illegible]ற பட்சத்தில் அந்த மாஜிஸ்திரேட்டானவர் இந்த விலக்குக்கு வுட்பட்டவராயிருக்கிறார்.

பத்தாம் விலக்கு:—இப்படிப்பட்டவனுகிய இன்னுனிடத்திலே நீ ஜாக்கிரதையாயிருக்கவேணும் மென்று ஒருவனுக்கு நல்ல எண்ணத்தோடு முன்னெச்சரிக்கை செய்தால், அப்படி யாருக்கு செய்யப்படுகிறதோ அவனுடைய நன்மைக்காகவாவது, அவனைச் சேர்ந்த வேறொருவனுடைய நன்மைக்காகவாவது, அசேஷ ஜனங்களுடைய நன்மைக்காகவாவது, அப்படி செய்யப்படுகிற பட்சத்தில் அது அவதூறாகமாட்டாது.

அவதூறு செய்வதற்குத் தெண்டனை
(500 வது செக்ஷன்)

ஒருவனை அவதூறு செய்கிறவன் இரண்டுவருஷத்திற்கு அதிகப்படாமல் வெறுங்காவலில் வைக்கப்படுவான், அல்லது அபராதத்திற்குள்ளாவான் அல்லது இரண்டுதெண்டனைக்கு முட்படுவான்.

## வியாக்கியானம்.

ஒருவர்பேரில் மற்றொருவர் பிரதிகூலமான அபிப்பிராயங் கொள்ளுவதினால் அவருக்குண்டாகும் மனவருத்தமும் அவ்வித கெட்ட அபிப்பிராயங்களினால் அவருக்குண்டாகும் பலவித அசவுகரியங்களும் இந்த அவதூறு குற்றத்துக்கு முக்கிய காரணங்களாயிருக்கின்றன.

பிரசித்தம் பண்ணுதல்:—அச்சுக்கோர்த்தல், ஒருவர் மற்றொருவருக்குச் சொல்லுதல், எழுதுதல், அல்லது வேறெவ்விதமாயாவது பிறருக்கு அறிவித்தல், இந்நான்கும் பிரசித்தஞ்செய்தல் எனச் சொல்லப்படும்; எவர் பேரில் அவதூறாகச் சொல்லப்படுகிறதோ அவருக்குமட்டில் அறிவித்தல் குற்றமாகாது. 18 பம்பாய் 2057 அலகலபாத் 205; போஸ்டு கார்டில் அவ்விதம் அறிவித்தால் அதை பலரும் பார்க்கக்கூடுமாதலால் அது குற்றமாகும். 6 சென்னை 38.

அவதூறான வார்த்தைகளை பத்திரிகைகளில் பிரசுரஞ்செய்தல்:—பத்திரிகை பிரசுரிப்பவர் அதில்கண்ட விஷயங்களைத் தெரிந்துகொண்டிருந்தாலும், தெரிந்து கொள்ளாவிட்டாலும், அதிற்கண்ட அவதூறான வார்த்தைகளுக்கு பாத்தியப்பட்டவராவார். 3 அலகபாத் 342. பத்திரிகை அச்சிடுவிப்பவர் (எடிட்டர்) [illegible] எண்ணத்துடன் அவருடைய வேலையைத் தகுந்த வேறொருவரிடம் ஒப்பிவித்துவிட்டுப்போன சமயத்தில் அவருக்குத்தெரியாமல் அவதூறான வார்த்தைகள் அப்பத்திரிகையில் எழுதப்பட்டிருந்தால் அதற்கு அவர் ஜவாப்தாரியாகமாட்டார். 9 சென்னை 387.

கெடுதி:—ஒருவர் செய்கையைப்பற்றி அபவாதமான சொற்கள் பிறருக்கு அறிவிக்கப்பட்டு அவர்கள் இவர்பேரில் ஓர்வித தாழ்மையான அபிப்பிராயங் கொள்ளுவார்களானால், அது கெடுதியென்று சொல்லப்படும். பிறர் தம்பேரில் தாழ்மையான அபிப்பிராயங் கொள்வார்களென்று தான் மட்டில் நினைப்பது அவதூறு குற்றமாகாது 7 அலகபாத் 220.

கெடுதிசெய்ய எண்ணங்கொள்ளுதல்:—ஒருவர் பிறர்பேரில் இகழ்ச்சியானவார்த்தைகள் சொல்வதினால் அவருக்கு கெடுதிகளுண்டானால் மட்டில் குற்றம், கெடுதிகளில்லாவிட்டால் குற்றமில்லை.



யென்பது கிடையாது: அவ்வார்த்தைகள் அவருக்குக் கெடுதிசெய்ய வேண்டுமென்று எதிரி நினைப்பதும், அல்லது அக்கெடுதிகள் செய்யுமென்று நம்பக் காரணங்களிருப்பதும்; போதுமானது. 28 கல்கத்தா 63.

வழக்கு:—கோழைத்தனமுள்ளவன் அல்லது அயோக்கியன் என்றுசொல்வது குற்றமாகும், 9 அலகபாத் 420; வாதிவகையறா எதிரிகள்பேரில் பொய்ப்பிராது தயாரித்துக் கொண்டிருந்தார்கள் என்று சொல்வதும் குற்றமாகும். 4 கல்கத்தா 124.

1 வது விலக்கு:— பொது நன்மையின் பொருட்டு பிரசுரிக்கப்பட்டதென்று சொல்வது மட்டில் போதுமானதல்ல; அது பிரசுரிக்கப்படும் மாதிரியைக்கொண்டு அது அவதூறு குற்றமாகும். 19 பம்பாய் 703. எவை யெவை உண்மையானவைகளோ அவைகளைமட்டில் பிரசுரிக்கலாமேயன்றி தகாத விஷயங்களைச் சேர்த்துச் சொல்வதுங் குற்றமாகும். ஒருவர் பரஸ்திரீயுடன் சம்பந்தப்பட்டதாக அவ்வகுப்பு ஜாதியார்கள் ஒன்றுகூடி பஞ்சாயத்துப் பேசி அந்த ஸ்திரீபுருஷர் இருவரையும் ஜாதிபிரஷ்டஞ்செய்ததுமன்றி அந்த ஜாதியார்கள் வீடுகளில் அவர்கள் நுழையும்படி இடங்கொடுக்கக்கூடாதென்றும்; அவர்களுக்கு சாப்பாடு முதலியன போடக்கூடாதென்றும் கட்டுப்பாடுகள் செய்தார்கள்: அது விபரங்கண்டு துண்டுபத்திரிகைகளும் அச்சிட்டு பிரசுரித்தார்கள்; இவ்விதஞ்செய்தது குற்றமாகும். 3 அலகபாத் 664; இந்த ஜாதியாரின் குரு இவ்வித கட்டுப்பாடுகள் செய்வது குற்றமாகாது (அடியிற்கண்ட 7வது விலக்கைப்பார்க்க)

2 வது விலக்கு:—ஒரு பொதுமனிதனுடைய பொதுவான குணத்தைப்பற்றி பொதுநன்மையின் பொருட்டு சொல்லலாம்; அவ்விதஞ் சொல்வது யோக்கியத்தன்மையாகவாவது யோக்கியத்தன்மையாக நம்புவதாகவாவது இருக்கவேண்டும். வேறுமென்று பொய்யான விஷயங்களை யெடுத்துச் சொல்லக் கூடாது: பொய்யான விஷயமென்று நம்பத்தகுந்த காரணங்களிருந்தால் அவைகளைச் சொல்லக்கூடாது. 3 அலகபாத் 815.

3 வது விலக்கு:—பப்ளிக் உத்தியோகஸ்தர்கள் அல்லாத அனேகர் லோகோபகார சிந்தையுடையவர்களாயிருக்கிறார்கள்.

பொது ஜனங்களுக்கு வேண்டிய சௌகரியங்களைச் செய்வதில் அவர்கள் சிரத்தையுடையவர்களா யிருக்கிறார்கள், சர்க்கார் உத்தியோகஸ்தர்கள் செய்யும் வேலைகளைப் பற்றி பொதுஜனங்கள் ஆதரித்து அல்லது ஆக்ஷேபித்துச் சொல்வதுபோல் மேற்கண்ட லோகோபகார சிந்தையுடையவர்கள் செய்கைகளைப் பற்றியுஞ் சொல்லலாம்.

4 வது விலக்கு:—[illegible] ஸ்தலங்களில் நடக்கும் விஷயங்களை பொதுஜனங்கள் தெரிந்துகொள்ள வேண்டிய அவசிய மாகையால் அவ்விஷயங்களை யெடுத்துச்சொல்வது அவதூறாகமாட்டாது.

5 வது விலக்கு:—கோர்ட்டார் செய்யும் தீர்மானங்களின் பேரில் அவைகளையாதரித்து அல்லது ஆக்ஷேபித்து வியாக்கியானங்கள் செய்வது குற்றமாகாது.

6 வது விலக்கு:—ஒருவர் எழுதிய புஸ்தகம் படம் முதலியனவற்றைப்பற்றி குற்றஞ் சாட்டுவதினால் அவர்கள் தங்கள் வேலையை இனி நன்றாய் கவனித்து சரியாக எழுதப்படி தூண்டுதல் செய்யுமாதலால் அவ்விதஞ் சொல்வது குற்றமாகமாட்டாது.

7வதுவிலக்கு:—ஓர் வகுப்பு ஜாதியாரின் ஒரு அந்தஜாதிக்குத் தாழ்மையான குலத்தவனுடன் அவ்வகுப்பு ஸ்திரீ யொருவள் திரேகசம்பந்தப்பட்டதால் அவளை ஜாதி பிரஷ்டஞ் செய்திருப்பதாகவும், அஜ்ஜாதியார் அவளிடம் பேசக்கூடாதென்றுஞ் சொல்வது குற்றமாகாது, 22 கல்கத்தா 46; ஓர் வகுப்பு ஜாதி நாட்டாண்மைக்காரன் துர்நடவடிக்கையுள்ள அவ்வகுப்பு ஸ்திரீயொருவளை ஜாதி பிரஷ்டஞ் செய்வது குற்றமாகாது. 24 பம்பாய் 13.

8வது விலக்கு:—குற்றஞ் செய்யுமொருவன் செய்கைகளைப்பற்றி அவனுடைய மேலதிகாரிகளிடத்தில் தெரிவிப்பது குற்றமாகாது. 19 பம்பாய் 717; மாஜிஸ்டிரேட்டுகளிடத்திலாவது போலீசாரிடத்திலாவது செய்து கொள்ளும் பிராது நல்ல எண்ணத்துடன் செய்யப்படாவிட்டால் அவைகள் அவதூறு குற்றமாகும். 3 அலகபாத் 815.

9வது விலக்கு.—ஜட்ஜிகள், சக்ஷிக்காரர்கள், வக்கீல்கள், சாக்ஷிகள் இவர்கள் சொல்லக்கடமைப்பட்ட விஷயங்களைச் சொல்வது குற்றமாகாது; ஜட்ஜிகள் கேஸ்விசாரணை செய்து கொண்டிருக்கும்



போது அவர்கள் சொல்லும் வார்த்தைகள் பொய்யாக விருந்தாலும்; விரோதத்தின்பேரில் சொல்லப்பட்டாலும், தகுந்த காரணங்களின்றி சொன்னாலும், அவைகள் அவதூறாகமாட்டாது, 17 சென்னை 87; பொய்யாகவாவது விரோதத்தின்பேரிலாவது, பொருத்தமுள்ள அல்லது பொருத்தமில்லாத வார்த்தைகளை அட்வொகேட்டுகள் சொல்வது குற்றமாகாது, 10 சென்னை 28; சாக்ஷிகள் கோர்ட்டில் வாக்குமூலங் கொடுப்பது அவதூறாகமாட்டாது, 17 பம்பாய் 127, 573; அவர்கள் சொல்வது பொய்யாகவிருந்தால் பொய்ப் பிரமாணத்துக்குத் தெண்டிக்கலாம். சென்னை 477

சாக்ஷிவிசாரணை நடந்து கொண்டிருக்கையில் ஒரு சக்ஷிக்காரன் மற்றொருசக்ஷிக்காரன் சாக்ஷிகளை கலைக்கிறானென்றும், அதனால் அவனை கோர்ட்டிலேயே, உட்கார்ந்திருக்கச்செய்ய வேண்டுமென்றுஞ் சொல்வதுகுற்றமாகாது, 9 பம்பாய் 269; ஒரு வக்கீல் கேசைப்பற்றி ஜட்ஜிக்கு எடுத்துச்சொல்லிக் கொண்டிருக்கையில் சாக்ஷிகள் மிகுந்த அற்பத்தன்மை யுடையவர்களென்று சொல்வது குற்றமாகாது. 19 பம்பாய் 340.

10 வதுவிலக்கு. ஜாதி பிரஷ்டஞ் செய்யப்பட்ட பிராமணனொருவன் சில பிராயச்சித்தங்கள் செய்து கொண்டதின்பேரில் அஜ்ஜாதி தலைவர்களில் பலர் அவனை ஜாதியிற் சேர்த்துக் கொண்டார்கள். அஜ்ஜாதியில் சிலர் இவனை மேற்கண்ட விதம் ஜாதியிற் சேர்த்துக்கொண்டது பிசகென்றும், இவர் தோஷி அல்லது பாபஞ் செய்தவரென்றும் மேற்கண்ட விதம் சேர்த்துக்கொண்ட ஆறுமாதங்களுக்குப் பிறகு துண்டு பத்திரிகைகள் போட்டு பலருக்கும் அறிவித்தார்கள். இவ்விதஞ் செய்தது அவதூறு குற்றமாகும். 15 சென்னை 214; ஒருவன் மனைவியை விபசாரியென்று சொல்வதைப்பற்றி அவ்விதஞ் சொல்பவர்கள்பேரில் அவள் புருஷன் அவதூறு குற்றஞ் சாட்டி பிராது செய்யலாம். 14 சென்னை 379.

## ரெவனியு.

குடியானவர்கள் செய்யும் மராமத்துச் செலவுகளை பூமிக்குடையவர் கொடுக்கவேண்டுமென்பது

வடமலையாளம் ஜில்லா குட்டு பரம்பா முனிசிப் இலாகாவைச் சேர்ந்த ஓர் கிராமத்திய சில நிலம் கார்ணவன் A என்பவரால் B

க்கு 1881ஞ அக்டோபர் மாதத்தில் குத்தகைக்குக் கொடுக்கப்பட்டிருந்தது. பிறகு B யுடைய குத்தகை பாத்தியங்கள் C க்கு விற்கப்பட்டுப் போய்விட்டன. A இறந்துவிட்டார்; அவருக்கு வார்சாக வந்த கார்ன்வன் D ஷை குத்தகை நிலம் தன் வசம் விட்டுவிட்டப்படவேண்டுமென C பேரில் வழக்கிட்டார்.

எதிர்வாதம்:—1887 ஞத்திய லாண்டு இம்புரூவ் மெண்டு ஆக்ட்டு 7வது செக்ஷன் 1900 ஞத்திய ஷை ஆக்ட்டு 19வது செக்ஷன் இவைகளின்படி தான் மருமத்துகள் செய்த தொகை பூரவும் கொடுத்தாலன்றி தான் அனுபவித்து வரும் நிலம் (பரம்பா) D வசம் ஒப்புவிக்கப்பட நியாயமில்லையென்று C சுகியாடினார். கார்னவன் A க்கும் குடியானவன் B க்கும் 1881 ஞத்தில் ஏற்பட்டிருக்கும் உடன்படிக்கையில் எவ்வளவு தொகை கண்டிருக்கிறதோ அந்தத் தொகைமட்டில் தான் கொடுக்கக்கடமைப்பட்டவனென்று D வாதித்தார். தாவா நிலங்களுக்கு மருமத்துகள் 1887ஞத்துக்கு பிற்பட்டு செய்யப்பட்டிருப்பதால் ஷை லாண்டு இம்புரூவ்மெண்டு ஆக்ட்டையனுசரித்து டிஸ்டிரிக்ட் முன்சிப் பிரதி வாதிக்கு அனுகூலமாக தீர்ப்பு செய்தார்கள். இந்த தீர்ப்பு டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரால் உறுதிசெய்யப்பட்டது. கீழ்கோர்ட்டார்கள் செய்ததீர்ப்புகள் சட்டவிரோதமானவை யென்று D, ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:—தாவா நிலத்தில் மருமத்துகள் ஷை 1887ஞத்திய லாண்டு இம்புரூவ் மெண்டு ஆக்ட்டு ஏற்படுவதற்கு முற்பட்டு செய்யப்பட்டிருந்தாலும் அதற்கு பிற்பட்டகாலங்களில் செய்யபட்டிருந்தாலும் அத்தொகை பூரவும் வாதி கொடுக்கக் கடமைப்பட்டவரல்ல வென்றும் A B இருவருக்குள்ளு மேற்பட்ட வுடன்படிக்கை ஷை ஆகட்டுக்கு ஏற்பட்ட தேதியுள்ள தாயிருக்கிறபடியால் அதிற்கண்ட தொகைமட்டில் வாதி கொடுக்க வேண்டிய தென்றும் ஜாஸ்தித் தொகை கொடுக்க நியாயமில்லை யென்றும் கீழ்கோர்ட்டார்கள் செய்த தீர்ப்புகள் ரத்து செய்யப்பட்டன.

32 சென்னை 1 ரண்டுபுரயல் குன்ஹிஸோர் கார்னவன் அ—வாதி நிரோத்குன்கி கண்ணன் வகையரா அ—பிரதிவாதிகள்



## தர்ம சொத்துக்களைப் பற்றிய சட்டம்.

தர்ம சோத்துக்களை ஜாஸ்தி காலங்களுக்கு குத்தகை செய்ய டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரிடம் சாங்க்ஷன் பெறுதல்

சூனி வகுப்பைச்சேர்ந்த மகம்மதியர் ஒருவர் ஒருமசோதிகட்டி அதில் சாஸ்வதமாக தருமங்கள் சரிவர நடந்து வரத்தக்கதாக ஒரு தஸ்தாவேஜி யேற்படுத்தினர். அதில் அவர்தன்னுயுள்பரியந்தம், தானே தருமங்களை நடத்திவருகிறதென்றும், தன் ஜீவதிசைக்குப் பிறகு தன்மனைவிகள் அவர்கள் விவாகங்கள் செய்து கொள்ளப்பட்ட தேதிப்படி வரிசைக்கிரமமாக தர்மபரிபாலனங்கள் செய்து வருகிறதென்றும், சொல்லப்பட்டிருக்கிறது. அவர் 1901 ஞத்தில் இறந்துவிட்டபடியால் அவர் மூத்தமனைவி A ஷை தர்மசொத்துக்களை கைக் கொண்டு அவைகளை பரிபாலிக்க 1904 ஞ மே மாதத்தில் லெட்டர்ஸ் அவ் அட்மினிஸ்டிரேஷன் அதிகாரமும் பெற்றாள். அத்தருமங்கள் நடத்த வேற்படுத்திய பூஸ்திதிகளின் வரும்படி மாதம் 1க்கு ரூ 90—8—0 கிடைத்துவந்தது. அவைகளை 30 வருடங்களுக்கு குத்தகைக்கு விடும்பட்சத்தில் மாதம் 1க்கு ரூ 130 வீதம் கொடுப்பதாக ஒருவர் ஒப்புக் கொண்டதால் அந்தப்படி குத்தகைசெய்ய அனுமதி கொடுக்கவேண்டுமென A டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரிடம் மனுக்கொடுத்தாள்.

ஷை தர்மங்கள் நடத்தப்படவேண்டியதில் அக்கரையுள்ள B ஜாஸ்திகாலங்களுக்கு குத்தகை செய்வது சட்ட விரோதமானதென்று ஆக்ஷேபித்தார்கள். இது விஷயம் ஹைகோர்ட்டார் அவர்களுடைய பரிசீலனைக்கு கொண்டுவரப்பட்டதில் தர்ம சொத்துக்களின் வரும்படி அபிவிருத்தி செய்யப்படவேண்டியிருந்தால் அது விஷயங்களை விசாரித்து உத்தரவு செய்ய டிஸ்டிரிக்ட் கோர்ட்டாருக்கு அதிகாரமிருக்கிறதென்றும், ஜாஸ்தி வரும்படிகளை யுத்தேசித்து நீண்டகாலங்களுக்கு குத்தகை செய்வது நியாயமானதென்றுந் தீர்ப்பு செய்யப்பட்டது. 36 கல்கத்தா 21 ஊஜா ரீ ன்னே சாபி பீ.

## 8. கடன்பட்டவன் பிள்ளைகள் பேரில் டிக்கிரி பெறுதலும் அதற்குக் கட்டுப்படக்கூடிய சொத்துக்களும்

A க்கு B ஒரு வெண்ணையில் கடன்பத்திரம் எழுதிக்கொடுத்திருந்தான். அந்தக் கடன் B யுடைய குடும்பார்த்தக்கடனென்றும், அக்கடனுக்கு மற்ற குடும்பஸ்தர்களும் கட்டுபடவேண்டியதென்றும் B யையும் அவர் பாகஸ்தர்கள் C D வகைராக்களையுஞ்சேர்த்து A வழக்கிட்டார். வியாஜ்ஜியத்தியில் B இறந்துவிட்டபடியால் அவர்பிள்ளைகள் E F இருவரும் B யின் வார்சுகளாகச் சேர்க்கப்பட்டார்கள்.

CD இருவரும் தங்கள் பாகம் தாவாகடனுக்குக் கட்டுப்படவேண்டிய நியாயமில்லையென்பதாக கக்ஷியாடினார்கள். அவர்கள் செய்த ஆக்ஷேபணைகளையங்கீகரித்து அவர்கள்பாகசொத்துக்களையும் அவர்களையும் தாவாவினின்றும் விலக்கி B யுடைய சொத்தினின்றும் தாவா கடன் வசூலிக்கப்படவேண்டுமென கீழ்கோர்ட்டார் தீர்ப்புசெய்தார்கள், இது விஷயமாய் C D இருவரையும் அப்பீல் பிரதிவாதிகளாகச் சேர்த்து A அப்பீல் செய்ததில் அசல் டிக்கிரி உறுதிசெய்யப்பட்டது. இதற்குப் பிறகும் கீழ்கோர்ட்டு டிக்கிரிக்கு 3 வருடங்கள் கழித்தும் A ஷை டிக்கிரியை நிறைவேற்றி E F இவர்கள் வசமுள்ள குடும்பப் பொதுச் சொத்துக்களை ஜப்தி செய்தார்.

வாதி A இந்த பிரதிவாதிகள் பேரில் பெற்ற டிக்கிரி 3 வருடங்களுக்கு மேற்பட்டு விட்டதால் வாதியின் டிக்கிரி காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டு போய்விட்டதென்றும், தாவா கடனுக்கு B யுடைய ஸ்வார்ஜித சொத்துக்கள் கட்டுப்படக் கூடியதேயன்றி குடும்பபிதிரார்ஜித சொத்துக்கள் கட்டுப்பட நியாயமில்லையென்றும் E F இருவரும் கக்ஷியாடினார்கள்.

தீர்ப்பு:—E F இவர்கள் பேரிலுமேற்பட்ட டிக்கிரி 3 வருடங்களுக்கு மேற்பட்டு விட்டாலும் ஷை டிக்கிரி விஷயமாய் அப்பீல் செய்யப்பட்டிருந்ததால் அதன் முடிவு தேதி முதல் 3 வருடங்களுக்குள் நிறைவேற்றப்படலாமென்றும், இந்த டிக்கிரிகடன் B யுடைய துன்மார்க்கச் செலவுகளுக்கு ஏற்பட்டகடனென்றுவது



அல்லது வேறு விதங்களில் தங்களைக்கட்டுப்படுத்தத்தகாத கடனென்றாவது E F இருவரும் ருஜூப்பிக்கக்கடமைப்பட்டவர்களென்றும், அவ்வித ருஜூக்கள் சி. பு. கோடு 244 வது செக்ஷன்படி நிறைவேற்று நடவடிக்கைகளில் விளங்கப்படலாமென்றும், அது விஷயமாய் அசல் வழக்கிட வேண்டிய அவசியமில்லையென்றும், தீர்ப்பு செய்யப்பட்டது.

33 பம்பாய் 39 சிவராம் தோண்டு புஜாரா அ வாதி—சகாராம் கிருஷ்ண குல்கார்ம் அ பிரதிவாதி.

### சொத்துள்ள விதந்து ஜீவனாம்ச வழக்குக் கோண்டுவரக் கூடாதென்பது.

A B இருவரும் ஹிந்து குடும்ப அவிபக்தசகோதரர்கள். A 1897 ௵ ச் திலும் B 1900 ௵ த்திலும் இறந்துவிட்டார்கள். A ரூ 937 சேவிங்கிஸ் பாங்கில் போட்டிருந்தார். அவருக்கு பிள்ளைகளில்லாததால் அவர் விதந்து C ஷை தொகையை A இறந்தவுடன் வாங்கிவிட்டாள். பிறகு 1904 ௵ த்தில் C தனக்கு சென்ற 3 வருடங்களின் ஜீவனாம்சத் தொகை ௵ 1 க்கு ரூ 120 வீதம் கிடைக்கவேண்டுமென்றும் பின்னிட்டு இந்த ரேட்டுப்படி தன்னாயுள்பரியந்தம் கிடைக்கவேண்டுமென்றும் B யுடைய குமாரர்கள் D E வகைரா பேரில் வழக்கிட்டாள்.

எதிர் வாதம்:—C தன்னுடைய புருஷனுடைய தொகை ரூ 937 சேவிங்கிஸ் பாங்கிலிருந்து வாங்கியிருப்பதால் அதன் வட்டியைக் கொண்டே வாதி காலக்ஷேபஞ் செய்யலாமென்றும் வாதிக்கு ௵ 1 க்கு ரூ 72 க்கு மேல் கொடுக்கவேண்டிய அவசியமில்லையென்றும் வாதி தன் கைவசமிருப்பில் ஜாஸ்தியான தொகை வைத்துக்கொண்டு இருக்குந்தாவா கொண்டுவந்தது சட்டப்படி செல்லாதென்றும், இது பருவத்திற்கு முந்தி கொண்டுவரப்பட்ட வழக்காதலால் தள்ளுபடி செய்யப்படவேண்டியதென்றும் கட்சியாடினார்கள்.

௵ 1 க்கு ரூ 100 வீதம் வாதிக்குக் கொடுபட வேண்டியதாக கீழ் கோர்ட்டார் தீர்ப்பு செய்தார்கள். இது நியாயவிரோதமானதென்று பிரதிவாதிகள் ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்கள்.

தீர்ப்பு:—வாதி வசத்தில் போதுமான தொகை யிருக்கும்போது வழக்கிட்டது செல்லாதென்றும், வியாஜ்ஜியம் பிருவமில்லாத காலத்தி லேற்பட்டிருப்பதால் தள்ளுபடி செய்யப்பட வேண்டிய தென்றும் தீர்ப்பு செய்தார்கள். 33 பம்பாய் 50 டட்டிராயவா மன்திவ்லு அ வாதி ருக்மாபாய் அ. பிரதிவாதி.

### 10 உயில் மூலமாக கொடுபட்ட சொத்தும் ஸ்வீகாரபாத்தியமும்.

A என்ற ஹிந்து தன் ஜீவதிசைக்குப் பிறகு தனக்குரிய சொத்துக்களைத்தன் பெண்ஜாதி B அனுபவித்து வருகிறதென்றும், அந்த B யின் ஜீவதிசைக்குப் பிறகு அச்சொத்துக்களை ஸ்வீகாரகுமாரன் C அடைகிறதென்றும் A 1888ஹு வருஷத்தில் ஒரு உயில் எழுதிவைத்திருந்தார், A யின் ஜீவதிசையிலேயே B இறந்துவிட்டாள் A 1904ஹு வருஷத்தின் இறந்தவுடன் அச்சொத்துக்களை A யுடைய சகோதரி பிள்ளைகள் D வகைரா ஸ்வாதீனஞ்செய்து கொண்டார்கள்.

C ஷை உயில்படி தான் A க்கு ஸ்வீகார புத்திரனென்றும் அதில் கண்டபடி A யுடைய சொத்துக்கள் தனக்கு பாத்தியமென்றும், அவைகள் D வு விடமிருந்து தனக்குக் கிடைக்கவேண்டுமென்றும், C வழக்கிட்டார்.

எதிர்வாதம்:— வாதி A க்கு ஸ்வீகார புத்திரனல்லவென்றும் அந்த பாத்தியமுறைமையில் வாதி தாவா சொத்துக்களை எந்தகாலத்திலும் அனுபவிக்கவில்லை யாதலால் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டிய தென்றும் D வு கட்சியாடினார்கள்.

வாதியை A ஸ்வீகாரஞ் செய்துகொண்டாரென்பதற்கு தகுந்த ருஜுவில்லாததால் கீழ் கோர்ட்டார் வாதியின் வழக்கை தள்ளுபடிசெய்து விட்டார்கள். இவ்விதம் தள்ளுபடி செய்யப்பட்டது பிசகென்று வாதி C ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:—தாவாவில்கண்ட சொத்துக்கள் C க்குக் கொடுபட்டதற்குக் காரணம் அவரை A ஸ்வீகாரஞ்செய்து கொண்டது என்பதற்கு உயிலில் எவ்வித ஆதாரமும் ஏற்படவில்லை யென்றும், அதனால் தாவா சொத்துக்கள் வாதிக்கு இனாமாகக் கொடுபட்ட



தாக வெண்ணப்பட வேண்டியதென்றும், அதனால் A யின் ஜீவதிசைக்குப் பிறகு அச்சொத்துக்களை யடைய வாதி பாத்தியஸ்தனென்றும், வாதியின் தாவாப்படி தீர்ப்பு செய்யப்பட்டது. 13 சென்னை 5 லால்டா பிரசாத் அ. வாதி — சாலிகிராம் வு. அ. பிரதிவாதிகள்.

## மகமதியலா.

### பெண்ஜாதி கிடைக்கவேண்டுமெனக் கொண்டுவரும் வழக்கு.

A என்ற மகம்மதியன் B என்பவளை விவாகஞ் செய்தகாலத்தில் அவ்விருவருக்குள்ளும் ஓர்வித உடன்படிக்கை யேற்பட்டது. A வேறு ஸ்திரீயை விவாகஞ் செய்துகொண்டால் A B இவ்விருவருக்குள்ளு மேற்பட்டிருந்த விவாக சம்பந்தங்களை விலக்கிக் கொள்ளுகிறதென்று உடன்படிக்கை செய்துகொண்டிருந்தார்கள். B க்கு எவ்வித சந்ததியுமில்லையென்று A வேறு ஸ்திரீயை விவாகஞ்செய்தார். இந்த விவாகம் நடந்தசில காலங் கழித்து B தன் தாய்வீட்டுக்குப் போனவள் A யுடைய வீட்டுக்குத் திரும்பி வாராமலே யிருந்துவிட்டாள். அதனால் A தன் மனைவி B தன் வீட்டுக்குவந்து தன்னுடன் கூடி வாழவேண்டுமென்று B பேரில் வழக்கிட்டார்.

எதிர்வாதம்:—A வேறு விவாகஞ் செய்துகொண்டதினால் A B இருவருக்குள்ளு மேற்பட்ட உடன்படிக்கையின்படி அவ்விருவருக்குமேற்பட்ட விவாக சம்பந்தங்களை விலக்கிக் கொண்டதாகவும், வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டியதென்றும், B கட்சியாடினாள்.

B சொல்லும் உடன்படிக்கை மகம்மதிய லாவுக்கு விரோதமானதென்றும், அதை யங்கீகரிக்கக் கூடாதென்றும், வேறுவிவாகஞ்செய்ய A எத்தனித்த காலத்தில் B எவ்வித ஆக்ஷேபனையுஞ் செய்யாதிருந்து விட்டதுமன்றி அவ்விவாகம் நடந்தபிறகும் A யுடன் சிலகாலம் கூடி வாழ்ந்துவிட்டு பிறகு விவாக சம்பந்தம் நீங்கிவிட்டதாக B சொல்வது செல்லத்தக்கதல்லவென்றும், வாதி வாதித்தார்.

தீர்ப்பு:—A. வேறு விவாகஞ் செய்துகொண்டிருக்கும் B அவள் புருஷன் A.யுடன் கூடிவாழ்ந்து சில காலங்கிரமித்து அவ்விருவருக்குள்ளு மேற்பட்ட விவாகசம்பந்தங்களை B. நீக்கிக்கொண்டினால் அவர்களுக்குள் ஆதியிலேற்பட்ட வுடன்படிக்கை ரத்தாகமாட்டாதென்றும், மகமதிய லாப்படி அந்த வுடன்படிக்கை செல்லுபடியுள்ளதென்றும், வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டது.

36. கல்கத்தா 23. அயட்டுனேச பீபீ. அ. வாதி— காராம் அலி. அ. பிரதிவாதி.

## சிவில் புரீஸீஜர் கோடு

சப்கோர்ட்டு ஸ்மால்காஸ்டிக்கிரிநிறை வேறு நடவடிக்கைகளின் உத்திரவின்பேரில் டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்யலாமென்பது.

A. பேரில் B. சப்கோர்ட்டு ஸ்மால்காஸில் ஒரு டிக்கிரி பெற்றிருந்தார். அந்த டிக்கிரித் தொகை வசூலிக்க ஜங்கம சொத்துக்களில்லாததால பிரதிவாதிகளின் ஸ்தாவர சொத்துக்களைத்தொடர்ந்து தொகை வசூலிக்கவேண்டியதின் நிமித்தம் அந்த டிக்கிரி டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டுக்கு மாற்றப்பட்டது. அந்த டிக்கிரி நிறைவேறு நடவடிக்கைகளில் பிரதிவாதிக்கு பிரதிகூலமாக சில உத்திரவுகள் டிஸ்டிரிக்ட் முனிசீப் செய்தார். அதனாலவ்வுத்திரவுகள் ரத்து செய்யப்படவேண்டுமென்று A. டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்தார்.

சப்கோர்ட்டு ஸ்மால்காஸ் டிக்கிரி நிறைவேறு நடவடிக்கைகளில் மேற்படி உத்திரவுகளை ரத்துசெய்ய டிஸ்டிரிக்ட் கோர்ட்டாருக்கு அதிகாரமில்லையென்று B. ஆக்ஷேபணைகள் செய்ததின்பேரில் ஷை கோர்ட்டாருக்கு சந்தேகமுண்டாகி இது விஷயமாய் ஹைகோர்ட்டுக்கு ரெபரென்ஸ் செய்தார்கள்.

உத்திரவு:— ஸ்மால்காஸ் கோர்ட்டு ஆக்ட்டு 27 வது செக்ஷன் தாவர் கேசுக்கு எவ்வித வொற்றுமையு மில்லையென்றும், ஸ்தாவர சொத்துக்களைத் தொடர்ந்து தொகை வசூலிக்கும் பொருட்டு டிஸ்டிரிக்ட் முனிசீப் கோர்ட்டாரால் செய்யப்படும் உத்திரவுகளின்



பேரில் டிஸ்டிரிக்ட் கோர்ட்டுக்கு அப்பீல் செய்யப்படலாமென்றும் உத்திரவு செய்யப்பட்டது.

37. அலகபாத் 1 அட்வாரிஷு. அ. வாதிகள்— மெய்குலால் அ. பிரதிவாதி.

சர்டிபிகேட் பெற்ற கார்டியன் அல்லாதவர்களும் மைனர்களுக்கு கார்டியனாயிருந்து வழக்கிடலாமென்பது.

A ஆ மைனர்களுக்கு கார்டியனாகவிருந்து நடவடிக்கைகள் நடத்துவதற்கு B கிரமப்படி டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரிடமிருந்து சர்டிபிகேட் பெற்றிருந்தார். ஷை மைனர்கள் C ஆ பேரில் செய்த ஓர் வழக்கு B யால் கொண்டுவரப்படாமல் D என்பரால் கொண்டுவரப்பட்டது.

சர்டிபிகேட் பெற்ற கார்டியனிருக்க D யால் கொண்டுவந்த வழக்கு சட்டப்படி செல்லுபடியுள்ளதல்லவென்று பிரதிவாதிகள் ஆக்ஷேபித்ததின்பேரில் B கார்டியனாகவிருந்து நடவடிக்கைகள் நடத்தும்பொருட்டு சி. பு. கோடு 44-வது செக்ஷன்படி B க்கு நோட்டீஸ் கொடுக்கப்பட்டது. அவர் அந்தப்படி வந்து மைனர்களுக்குக் கார்டியனாகவிருந்து யாதொரு நடவடிக்கைகளும் நடத்தவில்லை. ஷை மைனர்களுக்காக நடவடிக்கைகள் நடத்த D தகுந்த கார்டியனென்று தனிமையில் யாதொருவுத்தரவுஞ் செய்யப்படாமலே வாதிக்கு அனுகூலமாக தீர்ப்பு செய்துவிட்டார்கள்.

சர்டிபிகேட் பெற்ற கார்டியனிருக்க அவர் தாவா வழக்கை நடத்தாமலும் D ஷை மைனர்களுக்குக் கார்டியனாகவிருந்து நடவடிக்கைகள் நடத்த அருகருள்ளவரென்று யாதொரு உத்திரவுஞ் செய்யப்படாமலும், கீழ்கோர்ட்டார் தீர்ப்பு செய்தது சட்டவிரோதமென்று C ஆ அப்பீல் செய்தார்கள்.

தீர்ப்பு:— A ஆ மைனர்களுக்கு D கார்டியனென்பதை கோர்ட்டார் அங்கீகரித்து தனிமையில் யாதொரு வுத்திரவுஞ் செய்யவேண்டிய நவசியமில்லையென்றும், இந்த வழக்கை நடத்தும்படிக்கு D கார்டியனாக நியமிக்கப்பட்டிருப்பதால் அதை பிரதிவாதிகள் ஆக்ஷேபிக்கக் கூடாதென்றும், D யை கார்டியனாக நியமித்து யாதொரு உத்திரவுஞ் செய்யப்படாதிருக்கும் காரணத்தினால் வாதி

வழக்கு தள்ளுபடி செய்யப்பட நியாயமில்லையென்றும், பிரதிவாதிகள் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

31 அலகபாத் 7. ஸ்ரீதார்ருய் அ. வாதி; ரும்லால் அ. பிரதிவாதி

## காலாவதி தோஷ சட்டம்.

### (3) ரெவனியு ரிகார்டுகளிலுள்ள பிசகுகளைத் திருத்துவதும் ஸ்தாவர சொத்தில் பாத்திய ஸ்தாபன வழக்கும்.

சில ஸ்தாவர சொத்தில் A க்கு ஏற்பட்டிருந்த பட்டாபாத்தியம் 1895ஞூத்தில் B பேரால் பிசகாக மாற்றப்பட்டுப் போய்விட்டது. அது விஷயமாக 1903ஞூத்திலும் சில திருத்தல்கள் செய்யப்பட்டது. இதனால் A ஷை சொத்திலுள்ள பாத்தியம் தனக்கு ஸ்தாபிக்கப்பட வேண்டியதென்றும், பிசகாக B பேரில் ஏற்பட்ட பட்டா தன்பேரால் மாற்றப்படவேண்டுமென்றும் B பேரில் A 1904ஞூத்தில் பாத்திய ஸ்தாபன வழக்குக் கொண்டுவந்தார்.

எதிர்வாதம்: தாவாவில் சொல்லுகிறபடி வாதிக்கு 1895ஞூத்தில் வியாஜ்ஜிய மூலமேற்பட்டிருப்பதால் அது முதல் 6 வருடங்களுக்குள் வழக்கிடாததால் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதாக சுவியாடினர்.

வாதியின் தாவாப்படி கீழ்கோர்ட்டார் தீர்ப்பு செய்ததை டிஸ்டிரிக்ட் கோர்ட்டார் மாற்றிவிட்டார்கள். அதன் பேரில் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

தீர்ப்பு: காலாவதி தோஷசட்டம் 2 வது ஷிடியூல் 120வது ஆர்டிகிள்படி வாதியின் தாவாவுக்கு 6 வருடக் காலாவதியேயன்றி 12 வருடக் காலாவதி தோஷமில்லையென்றும், 1903ஞூத்தி லேற்பட்ட திருத்தம் 1895ஞூத்தி லேற்பட்ட மாறுதலை உறுதி செய்ததேயன்றி அது புதிதான மாறுதலாக எண்ணப்படமாட்டாதென்றும், வாதிக்கு வியாஜ்ஜிய மூலம் 1895ஞூத்தி லேற்பட்டிருப்பதால் வாதியின் தாவா காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுப் போய்விட்டதென்றும், அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.



31 அலகபாத் 9 ஆக்பர்கான் ஆ அ. வா[illegible] — [illegible]ாபன் அ. பிரதிவாதி.

## சொத்துப்பராதீனசட்டம்

### (4) பெந்தக பத்திரஷரத்துக்கு விரோதமாக டிக்கிரி செய்வது கூடாதென்பது

A சில ஸ்தாவர சொத்துக்களை B யிடத்தில் பெந்தகம் வைத்து கடன் வாங்கியிருந்தார். A இறந்து விட்டார். ஷை பெந்தகக்கடன் கொடுபடாததால் A யின் பிள்ளை, பெண், மனைவியாகிய C D E இம்மூவரையும் A க்கு வார்சாகச் சேர்த்து ஷை தொகை பெந்தக சொத்து ஏலவிற்றுமுதலால் தனக்குக் கிடைக்க வேண்டுமென B வழக்கிட்டார்.

எதிர்வாதம்:— தாவாவிற்கண்ட பெந்தக சொத்து A க்கு மட்டில் பாத்தியமில்லையென்றும், அது A யுடைய சகோதரர்கள் சிலருக்கும் பாத்தியமென்றும், அவர்கள் பாகசொத்துக்களுஞ் சேர்க்கப்பட்டிருப்பதால் அவர்களை சுவிர்காரர்களாகச் சேர்க்காமல் கொண்டுவந்திருக்கும் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென்றும், அவர்கள் பாகம் விலக்கப்படவேண்டுமென்றும் சுவியாடினார்கள்.

பிரதிவாதிகளின் ஆக்ஷேபனைகளை யனுசரித்து பெந்தக சொத்தில் சிலதை நீக்கி ஐந்திலிரண்டு பாகத்தை மட்டில் கட்டுப்படுத்தி கீழ்கோர்ட்டார் டிக்கிரி செய்தார்கள். இப்படிச் செய்தது சட்டவிரோதமானதென்று வாதி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:— A ஜீவந்தராயிருந்து அவர்பேரில் இவ்வழக்குக் கொண்டுவரப்பட்டிருக்கும் பட்சத்தில் அவர் இவ்வித ஆக்ஷேபனைகள் செய்யக்கூடாதாகையால் அவருக்கு பிரதிநிதிகளாகச் சேர்க்கப்பட்டிருக்கும் இந்த பிரதிவாதிகளும் மேற் சொன்ன ஆக்ஷேபனைகள் செய்யத் தடைபட்டிருக்கிறார்களென்றும், உபயவாதிகளின் பாத்தியங்களை மறுக்கும் மூன்றுவது மனுஷர்களை தாவாவில் கொண்டுவந்து சேர்ப்பது நியாயவிரோதமென்றும், தாவா சொத்தில் அவர்களுக்கும் பாத்தியமுண்டென்று சொல்லும் ஆக்ஷே

பணைகளைக் கொண்டு பெந்தக சொத்தில் சிலபாகத்தை விலக்கி
மற்ற பாகத்தைக் கொடர்ந்து தொகை வசூலிக்கப்பட வேண்டு
மென்று தீர்ப்பு செய்வது சட்ட விரோதமான தென்றும், 33 கல்
கத்தா 425 32 கல்கத்தா 746 இந்த ரூலிங்கிஸ்களை யனுசரித்துக்கீழ்
கோர்ட்டார் செய்த தீர்ப்பை ரத்துசெய்து பூருபெந்தக சொத்
தின் பேரிலும் டிக்கிரி செய்யப்பட்டது.

31 அலகபாத் 11 ஜோட்டி பிரஷாட் அ. வாதி—அஜீஸ்கான் வ
அ. பிரதிவாதிகள்.

5 பெந்தக பத்திர ஷரத்துக்கு விரோதமாக செய்துகொள்ளும் இரா
ஜினாமாவும் அதையனுசரித்து டிகெடுவுக்குமுன் கொண்டுவரப்ப
டும் வழக்கும்

A சில சொத்துக்களை B C இருவருக்கும் பெந்தகம் வைத்
து ரூ 1000 கடன் வாங்கினார். டி சொத்துக்களை டி அசல்வ
ட்டித் தொகைகளுக்காக B C இருவரும் 25 வருடங்களுக்கு
அனுபவித்துக் கொள்ளுகிறதென்று டி பெந்தக பத்திரத்தில்கண்
டிருக்கிறது. டி பத்திரத்தை ரிஜிஸ்டர் செய்துகொடுக்க A
ஆக்ஷேபித்ததின்பேரில் அது கட்டாய ரிஜிஸ்டர் செய்யப்பட்டது.
அந்தபத்திர ஷரத்தை யனுசரித்து டி ஸ்தாவர சொத்தின் பேரி
லுள்ள பட்டா பாத்தியம் தங்கள் பேரால் மாற்றப்பட வேண்டுமெ
ன்று B C இருவரும் ரெவனியு அதிகாரிகளிடத்தில் மனுக்கொடு
த்தார்கள். அதுவிஷயமாய் அவ்வதிகாரிகள் விசாரணை செய்ததில்
D என்பவன் தனக்கும் அச்சொத்தில் பாத்திய மிருக்கிற தென்
றும் தனிபாக சொத்துக்கள் பட்டா மாற்றல் செய்யப்படக் கூடா
தென்றும் ஆக்ஷேபித்தார். பின்பு A B C D இந்நால்வரும் இரா
ஜியாகி டி பெந்தக சொத்துக்களுக்கு A D இருவரும் பாத்தியஸ்
தர்களென்றும் டி பெந்தக சொத்துக்கள் 25 வருஷகெடு கிபந்தனை
யன்னியில் அதற்கு முற்பட்ட காலத்திலேயே மீட்டுக்கொள்ள அவ்
விருவரும் பாத்தியமுடையவர்க ளென்றும் ஓர்வித தஸ்தாவேஜி
யேற்படுத்திக் கொண்டார்கள். அந்த தஸ்தாவேஜியை யனுசரித்து
பெந்தக சொத்திலுள்ள பட்டாபாத்தியங்கள் **B C** இருவர்பேரா
லும் மாற்றப்பட்டது. பின்பு A D இருவரும் டி பெந்தகசொத்



துக்கள் மீட்கப்படவேண்டுமென்று B C இருவர் பேரிலும் டி
25 வருட கெடுவுக்கு முந்தியே வழக்கிட்டார்கள்.

எதிர்வாதம்:— ரெவனியு அதிகாரிகளின் கோர்ட்டுகளில் கக்ஷிக்
காரர்கள் செய்துகொள்ளும் இராஜினாமா ஷரத்துகள் ரிஜிஸ்டராயி
ருக்கிற பெந்தக பத்திர ஷரத்துக்களுக்கு விரோதமாகச் செல்லமா
ட்டாதென்றும் அந்தபத்திர ஷரத்துக்கு விரோதமாக 25 வருட கெ
டுவுக்குமுன் கொண்டுவரப்பட்டிருக்கும் இவ்வழக்கு தள்ளுபடி செ
ய்யப்படவேண்டிய தென்றும் கக்ஷியாடினார்கள்.

வாதிகள் 28 அலகபாத் 78 ரூலிங்கிஸை தங்களுக்கு ஆதார
மாக வெடுத்துக் காட்டியதின்பேரில் கீழ்கோர்ட்டார் வாதிகளின்
பிராதுப்படி தீர்ப்பு செய்தார்கள். இவ்விதஞ் செய்தது சட்டவிரோ
தமானதென்று B C ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள்.

தீர்ப்பு:— உபயவாதிகளும் ரெவனியு கோர்ட்டில் செய்துகொண்ட
ராஜினாமா ரிஜிஸ்டர் செய்யப்படாததால் ரிஜிஸ்டரான பெந்தகப்பத்
திரஷரத்துக்கு விரோதமாக தீர்ப்பு செய்தது சட்ட விரோதமான
தென்றும், வாதிகளின் வழக்கு பருவத்திற்கு முந்தி கொண்டுவரப்
பட்டதென்றும் 22 சென்னை 503 ரூலிங்கிசை யனுசரித்து கீழ் கோ
ர்ட்டார் செய்த தீர்ப்பு ரத்து செய்யப்பட்டு வாதிகளின் வழக்கு தள்
ளுபடி செய்யப்பட்டது.

31 அலகபாத் 13 சாதர் உடீன் ஆமக்ஷு அ. வாதிகள்—சாஜு
ஆ. அ. பிரதிவாதிகள்.

6. பெந்தகப்பத்திர வழக்கில் வெண்ணலே ராஜினாமா
டிக்கிரியும் பிற்பட்டு அதே பெந்தகப்பத்திரத்தின்
பேரில் வழக்கும்.

**A** க்கு B ஒரு பெந்தகபத்திரம் எழுதிக் கொடுத்திருந்தார்.
B இறந்துவிட்டபடியால் அவர் பிள்ளைகள் **C D** இருவரையும் பி
ரதிவாதிகளாகச் சேர்த்து டி பெந்தகப்பத்திரத்தின்பேரில் **A** வழ
க்கிட்டதில் உபயவாதிகளும் ராஜியாகி டி பெந்தக பாத்தியங்களை
விலக்கி தாவாவிற் கண்ட தொகைக்கு வெண்ணலே டிக்கிரி செய்ய
ப்படவேண்டுமென கேட்டுக்கொண்டதின்பேரில் அந்தப்படி டிக்கிரி
செய்யப்பட்டது. அந்த டிக்கிரிப்படி பூருத் தொகையும் வசூலிக்க
ப்பட முடியாதிருந்ததால் பாக்கி தொகை தனக்கு டி பெந்தக

சொத்துக்கள் ஏலவிற்று முதலால் கிடைக்கவேண்டுமென்று C D இருவர் பேரிலும் A புனர் வழக்கிட்டார்.

எதிர்வாதம்:—வாதியின் தாவா சி. பு. கோடு 13 வது செக்ஷன் படி ரெஸ்ஜூடிகேடா தோஷத்துக்கு உள்ளாக்கப்பட்டிருப்பதால் வாதியின் வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டுமென பிரதிவாதிகள் தகராறாடினார்கள்.

கீழ்கோர்ட்டார் வாதியின் தாவாப்படி தீர்ப்பு செய்தார்கள். இந்த தீர்ப்பு டிஸ்டிரிக்ட் கோர்ட்டாரால் ரத்து செய்யப்பட்டதால் வாதி ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

தீர்ப்பு:— வாதி பிராதில் கேட்ட பரிகாரத்தைப் பற்றி தீர்ப்பில் யாதொன்றும் சொல்லப் படாததால் அந்தப் பரிகாரம் தள்ளுபடி செய்யப்பட்டதாக எண்ணப்பட வேண்டுமென்று ஷை 13 வது செக்ஷன் விளக்கத்தில் சொல்லப்பட்டிருக்கிறபடி வாதி கேட்ட பரிகாரம் நிராகரிக்கப்பட்டிருக்கிறதென்றும் வாதியின் தாவா தள்ளுபடி செய்யப்பட்டது.

31. அலகபாத் 19, பியாரிலால் அ. வாதிநண்டாராம் ஆ அ. பிரதிவாதிகள்.

7. பிரதிப் பிரயோஜனத்துடன் மைனா செய்து கொடுத்த சாசனம்.

A க்கும் அவர் சகோதரர் குமாரர் B க்கும் பொதுவாக அரைப்பங்கு நிலமிருந்தது. A அரைக்காலே அரை வீசம் பாகத்தையும் B அரைக்காலே முக்கால் வீசம் பாகத்தையும் விற்றுவிட்டார்கள். B இறந்துவிட்டபடியால் அவர் குமாரர்கள் C D இருவரும் மைனராக விருந்தபடியால் அவர்களுக்கு A கார்டியனாக நியமிக்கப்பட்டிருந்தார். மேற்கண்டபடி விற்றுவிட்டது போக பாக்கியிருந்த அரைக்காலே அரைவீசம்பாகத்தையும் ACD மூவருஞ்சேர்ந்து E யிடம் விற்றுவிட்டார்கள்.

பின்பு C D இருவரும் தாங்கள் மைனர்களாயிருந்த காலத்தில் மேற்கண்டபடி E க்கு சாசனஞ்செய்யப்பட்டிருப்பதால் அது செல்லாதென்றும், அவர்கள் புத்திக்குறைவு வுடையவர்களாயும் அதுபோகத் தெரியாதவர்களாயு மிருந்தபடியால் துன்மார்க்க நடையுடைய அவர்கள் கார்டியன் A யுடைய அதிகாரத்துக்குப் பயந்து



சாசனத்தில் கையெழுத்து செய்ததாகவும், ஷை சாசனத்தின் பிரதிப் பிரயோஜனம் யாதொன்றையும் தாங்கள் அடையவில்லையென்றும், அந்த சாசனத்தினால் அவர்கள் எவ்வித நன்மைகளையுமடையவில்லையென்றும் அது அனாவசியமாக எழுதிக் கொடுக்கப்பட்டதென்றும் அதனாலந்த சாசனம் ரத்து செய்யப்பட்டு தங்கள் பாகச்சொத்துக்கள் தங்களுக்குக் கிடைக்கவேண்டுமென்றும் E பேரில் வழக்கிட்டார்கள்.

எதிர்வாதம்: —சாசனஞ்செய்து கொடுத்த காலத்தில் வாதிகள் மைனர்களா யிருக்கவில்லையென்றும் அவர்கள் இருவரும் மேஜரானவர்களென்று பிரதிவாதி நம்பும் படியாகச் செய்து சாசனஞ்செய்து கொடுத்திருப்பதால் அந்த சாசனத்தையவர்கள் ஆக்ஷேபிக்கத் தடைபட்டிருக்கிறார்களென்றும் எஸ்டாபல் தோஷமேற்பட்டிருக்கிறதென்றும், வாதிகள் தகுந்த பிரதிப் பிரயோஜன மடைந்திருப்பதால் சாசனத் தொகை கொடுத்து விடுவதாகச் சொல்லாமல் கொண்டுவந்திருக்கும் வழக்கு நிற்கத்தகுந்ததல்லவென்றும் வாதிகளின் தாவா தள்ளுபடி செய்யப்படவேண்டியதென்றும் தகராறாடினார்கள்.

சாசனமேற்பட்ட காலத்தில் வாதிகள் மைனர்களா யிருந்தார்களென்பதற்குத் தகுந்த ருஜுக்களிருப்பதால் சாசனம் செல்லத்தகுந்ததல்லவென்றும், ஆனால் வாதிகள் தாங்கள் மேஜரானவர்களென்று பிரதிவாதிக்கு நம்பிக்கை சொல்லியதின்பேரில் சாசனத்தொகை கொடுபட்டிருப்பதால் அந்தத் தொகையைப் பிரதிவாதிக்குக்கொடுத்துவிட்டு தாவா சொத்துக்களை வாதிகள் வசப்படுத்திக் கொள்ளுகிறதென்றும் கீழ் கோர்ட்டார் தீர்ப்பு செய்தார்கள்.

இந்த தீர்ப்பு சரியல்லவென்று உபயவாதிகளும் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்கள்.

தீர்ப்பு:— வாதிகளுக்கு கார்டியனாகவிருந்து நடவடிக்கைகள் நடத்த வேண்டியதின் பொருட்டு சர்டிபிகேட் பெறுவதற்கு A டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் கொடுத்திருக்கும் மனுவில் வாதிகளின் வயது குறிப்பிட்டிருக்கிறதென்றும், அதைக் கொண்டு கணக்கிட்டுப்பார்த்தால் சாசன காலத்தில் வாதிகள் 21 வயதுக் குட்பட்ட மைனர்களாயிருந்திருக்கிறார்களென்றும் அதனால் வாதிகள் செய்துகொடுத்த சாசனம் சட்டப்படி செல்லுபடி யற்றதென்றும், 30 கல்கத்தா

539 ரூலிங்கிசை யனுசரித்து சாசனத்தை ரத்துசெய்ததாக கீழ்கோர்ட்டார் செய்த தீர்ப்பு கிரமமானதென்றும், 26 கல்கத்தா 38 ரூலிங்கிலில் சொல்லியபடி எவ்வித எஸ்டாபல் தோஷமுமில்லையென்றும், சாசனத்தின் முழுப் பிரதிப் பிரயோஜனத்தையும் வாதிகளடையவில்லையென்றும், ஷை சொத்தின்பேரில் முன் பெற்றகடன்களேற்பட்டு அவை சாசனத் தொகையினின்றுங் கொடுக்கப்பட்டிருப்பதால் அந்தத்தொகைமட்டில் பிரதிவாதிக்கு வாதிகள் கொடுத்துவிட்டு தாவா சொத்துக்களை வாதிகள் வசப்படுத்திக் கொள்ளவேண்டியதென்றும், தீர்ப்பு செய்யப்பட்டது.

31 அலகபாத் 21 தாகர் காத்சிங் ஆ அ. வாதிகள் லோடா பிரசாத் தமார்கா பிரசாத் அ. பிரதிவாதிகள்.

# கிரிமனல் புரிஸீஜர்கோடு

3 சட்டவிரோதமாக பிராது நடவடிக்கைகள் நடத்தியதற்குப் பரிகாரங்கள்.

1908ளு பிப்பரவரி மார்ச்சு மாதங்களில் தூத்துக்குடியிலும் திருநெல்வேலியிலும் சுப்பிரமணிய சிவா, சிதம்பரபிள்ளை, பத்மநாப அய்யங்கார் இம்மூவரும் இராஜத்துரோகமான வார்த்தைகள் பிரசங்கங்கள் செய்ததாகவும், அதனுலவர்கள் பேரில் இ. பி. கோடு 124 A, 153 A, 505 இந்த செக்ஷன்களின்படி நடவடிக்கைகள் நடத்தவேண்டுமென்றும், சென்னை கவர்ன்மெண்டாரவர்கள் திருநெல்வேலி டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட்டுக்கு 1908ளு மார்ச்சுமீ 23௳ தந்தி மூலமாய் உத்திரவு கொடுத்தார்கள். உடனே டிஸ்டிரிக்ட் மாஜிஸ்டிரேட் ஷை உத்திரவுக்கு சுருக்கமொன்று பிராவிகியூட்டிங் போலீஸ் இனிஸ்பெக்டருக்குக் கொடுத்தும் அவருக்கு நேரில் சில விஷயங்களைத் தெரிவித்தும் மேற்சொன்னவர்கள் பேரில் பிராது நடவடிக்கைகள் நடத்தும்படி உத்திரவு செய்தார்கள்.

அதன்பேரில் போலீஸ் இனிஸ்பெக்டர் ஷை உத்திரவு சுருக்கத்தை தாகல்செய்து சுப்பிரமணிய சிவா 1908ளு பிப்பரவரி மாதம் 23, 25, 26௳ களிலும் ஷை வருஷம்மார்ச்சுமாதம் 5௳



யிலும் இராஜதுரோகமான வார்த்தைகள் பிரசங்கஞ் செய்ததாக இ. பி. கோடு 124 A செக்ஷன்படி குற்றஞ்சாட்டியும், சிதம்பரபிள்ளை அப்படிப்பட்டவை குற்றஞ் செய்ததாக 124 A, 109, இந்த செக்ஷன்களின்படி குற்றஞ் சாட்டியும் பிராது கொடுத்தார்.

ஷை பிப்பரவரி மாதம் 23௳ யில் தூத்துக்குடி உஜ்ஜினிமாகாளியம்மன் கோவிலில் சுப்பிரமணிய சிவா இராஜதுரோகமான வார்த்தைகள் பிரசங்கங்கள் செய்ததாகவும் அப்போது சிதம்பரபிள்ளையும் கூடவிருந்து இராஜதுரோகமான வார்த்தைகள் பிரசங்கங்கள் செய்ததாகவும் பிப்பரவரிமாதம் 25௳ கருப்பண்ணசாமி கோவிலில் சுப்பிரமணிய சிவா இராஜதுரோகமான வார்த்தைகள் பிரசங்கங்கள் செய்ததாகவும், அப்போது சிதம்பரபிள்ளை அவருடனிருந்ததாகவும், ஆனல் சிதம்பரபிள்ளை யாதொன்றும் பேசவில்லையென்றும், மார்ச்சு மாதம் 5௳யில் சுப்பிரமணிய சிவா கடற்றுறையில் இராஜதுரோகமான வார்த்தைகள் பிரசங்கஞ் செய்ததாகவும் அப்போது சிதம்பரபிள்ளை அவிடத்துக்கு வரவில்லையென்றும், கவர்ன்மெண்டு தரப்பில் ருஜுக்கள் விடப்பட்டன. ஷை ருஜுவம்சங்களைப்பற்றி எதிரிகள் பலவித ஆக்ஷேபனைகள் செய்ததுமன்றி அடியில்கண்டபடி சட்டவிரோதமாய் நடவடிக்கைகள் நடத்தியிருப்பதால் பிராது தள்ளுபடி செய்யப்படவேண்டியதென்றுங் கக்ஷியாடினர்கள்.

எதிர்வாதங்கள்:—(1) போலீஸ் இனிஸ்பெக்டர் கொடுத்திருப்பது போலீஸ் ரிபோர்ட்டாக பாவிக்கப்படவேண்டியதேயன்றி அதை பிராதாக அங்கீகரிக்கக்கூடாது.

(2) லோகல் கவர்ன்மெண்டாரவர்களால் பிறப்பிக்கப்பட்ட உத்திரவில் சரியான விபரங்கள் சொல்லப்படாததால் எதிரிகள் பேரில் கொடுபட்டிருக்கும் பிராது சட்டப்படி செல்லுபடியுள்ளதல்ல.

(3) எதிரிகள் பிரசங்கங்கள் செய்த இராஜதுரோகவார்த்தைகள் இன்னவையென்று பிராதில் சொல்லப்படாததால் எதிரிகள் பேரில் குற்றஞ்சாட்டியது எவ்விதத்திலும் செல்லத்தக்கதல்ல.

(4) சுப்பிரமணிய சிவா பிரசங்கஞ் செய்தபோது சிதம்பரபிள்ளை அவ்விடத்திலிருந்ததைக் கொண்டு அவர்பேரில் உடந்தைக் குற்றஞ் சாட்டியது சட்டவிரோதம்.

(5) மாஜிஸ்டிரேட் இந்த கேசை கி. பு. கோடு 200வது செக்ஷன்படி விசாரணைக்கு எடுத்துக் கொண்டபிறகு அதே கேசைப்பற்றி இன்வெஸ்டிகேஷன் செய்யும்படி அனுப்பியது சட்டப்படி செல்லுபடியுள்ளதல்ல.

(6) வேறொருவிடத்தில் பேசிய விஷயங்களை இந்த கேசுக்கு ருஜுவாக ஏற்றுக்கொண்டது சட்டப்படி செல்லுபடியுள்ளதல்ல.

(7) இ. பி கோடு 124 A செக்ஷன்படிக்கு மட்டில் நடவடிக்கைகள் நடத்தும்படி லோகல் கவர்ண்மெண்டார் உத்திரவு கொடுத்திருக்க இ பி கோடு 114 வது செக்ஷன்படிக்கும் நடவடிக்கைகள் நடத்தியது சட்டவிரோதம்.

(8) போலீஸ் அதிகாரிகளால் ஏற்பட்ட நோட் (குறிப்பு)களை சாக்ஷியமாக அங்கீகரித்துச் கொண்டது சட்டப்படி செல்லுபடியற்றது.

இந்த கேசை விசாரித்த ஸ்பெஷல் செஷன் ஜட்ஜியவர்கள் சிதம்பரபிள்ளைக்கு ஆயுள்பரியந்தம் தீபாந்திர தெண்டனையும் சுப்பிரமணிய சிவாவுக்கு 10௵ தீபாந்திர தெண்டனையும் விதித்ததைப்பற்றி அவ்விருவரும் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்து கொண்டதின்பேரில் அடியில்க்கண்ட தீர்மானங்கள் ஏற்பட்டன.

(1) லோகல் கவர்ண்மெண்டாரவர்களின் உத்திரவின் பேரில் அல்லது அவர்கள் அதிகாரம் கொடுப்பதின் பேரில் பிராது கொடுக்கப்பட வேண்டுமென்று கி. பு. கோடு 196வது செக்ஷனில் சொல்லப்பட்டிருக்கிறதே யன்றி பிராதில் சொல்லப்படவேண்டிய விஷயங்கள் ஒவ்வொன்றும் விபரமாகக்கண்டு உத்திரவு செய்யப்படவேண்டியதில்லை. இந்த செக்ஷன்படி கேஸை விசாரிக்கும் ஜட்ஜி இந்தப் பிராது செய்ய கவர்ண்மெண்டாரவர்களுடைய உத்திரவு இருக்கிறதாவென்பதைமட்டில் கவனிக்கவேண்டியதேயன்றி மற்ற விஷயங்களைப்பற்றி கவனிக்க வேண்டியதவசியமில்லை. (இ. லா. ரி. 22 பம்பாய் 122 பாலகங்காதர திலகர்.)



(2) போலீசார் விசாரிக்க அதிகாரமில்லாத ஒரு கேஸ் விஷயமாகவாவது போலீஸதிகாரிகள் விசாரித்து ரிபோர்ட்டு செய்யக் கடமைப்படாத வேறு குற்றங்களைப்பற்றியாவது ஒரு போலீஸ் உத்தியோகஸ்தர் பிராது கொடுப்பாராகில் அது கி. பு. கோடு 4 (h) படி பிராதாக அங்கீகரிக்கப்படவேண்டும்; அது போலீஸ் ரிபோர்ட்டு ஆகமாட்டாது. (இ. லா. ரி 26 பம்பாய் 150)

(3) குற்றஞ்சாட்டப்பட்ட பிரசங்கங்கள் எவைகளோ அவைகளையாவது அல்லது இராஜதுரோகமான வார்த்தைகள் இன்னவையென்றாவது பிராதில் சொல்லாததினால் எவ்வித தோஷமுமில்லை. அவ்விதஞ் சொல்லாதிருந்ததினால் நியாயவிரோதங்கள் யாதொன்று மேற்படாததினால் அப்பிசகு குற்றமானதாக எண்ணப்படக்கூடாது; கி பு கோடு 537 (A) செக்ஷன் அதற்கு பரிகாரமாக ஏற்றுக் கொள்ளப்படவேண்டும்.

(4) கி பு கோடு 200 வது செக்ஷன்படி விசாரணைக்கு ஆரம்பித்த ஒரு மாஜிஸ்டிரேட் சட்டவிரோதமாக அதே கேசைப்பற்றி இன்வஸ்டிகேஷன் செய்யும்படி அனுப்பினாலும் அது அந்த கேஸின் மேற்பட்ட பிந்திய நடவடிக்கைகளுக்கு எவ்விதத்திலும் விரோதமாகமாட்டாது.

(5) பிராதில் இராஜதுரோகமான வார்த்தைகள் இன்னவையென்று சொல்லாமல் இ பி கோடு 124 A செக்ஷன்படி குற்றஞ்சாட்டியது பிசகுதான். அப்பிசகு தெரிந்தவுடனே அது விஷயமாக எவ்வித ஆக்ஷேபனைகளுஞ் செய்யாதிருந்து விட்டு விசாரணை முடிவில் ஆக்ஷேபிப்பது சரியல்ல; அதற்கு கி. பு. கோடு 537, 225 இந்த செக்ஷன்கள் பரிகாரமாக ஏற்றுக்கொள்ளப்படவேண்டும்.

(6) சில பிரசங்கங்கள் இராஜதுரோகமான வார்த்தைகளென்று குற்றஞ்சாட்டப்பட்டு அவ்வித பிரசங்கங்கள் ஒரே விஷயத்தைப்பற்றி சமீபகாலங்களுக்குள் ஏற்பட்ட பல பிரசங்கங்களுக்குள் ஒன்றாகவிருந்தால் அந்த பிரசங்கங்கள் ஒவ்வொன்றும் சாக்ஷியசட்டம் 14வது செக்ஷன்படி ருஜுவாக அங்கீகரிக்கப்படவேண்டும்; ஏனென்றால் அந்த பிரசங்கங்கள் ஒவ்வொன்றும் பேசுபவர்களின் எண்ணங்களை விளங்கிக் காட்டக் கூடியனவாகவிருக்கின்றன.

இ. பி கோடு 109 வது செக்ஷன்படி உடந்தைக் குற்றத்துடன் அக்குற்றம் நடந்த காலத்தில் அவ்வுடந்தைக் குற்றஞ் சாட்டப்பட்டவன் அவ்விடத்தில் ஆஜராக விருக்கும்பட்சத்தில் அது இ. பி கோடு 114வது செக்ஷன் படிக்கும் குற்றமாகும்; 124 A செக்ஷன்படி குற்றஞ்சாட்டி பிராது கொடுக்க லோகல் கவர்ன்மெண்டாரவர்கள் சாங்க்ஷன் கொடுத்திருப்பதைக்கொண்டு அந்த. செக்ஷனுடன் 114வது செக்ஷன்படிக்கும் குற்றஞ்சாட்டிபிராது கொடுக்கலாம்.

(8) பார்டிகளுக்குள் ஓர்வித ஏற்பாடுகள் நடந்து அந்த ஏற்பாடுகளின்படி பிரசங்கங்கள் செய்யப்பட்டால் அந்த பிரசங்கங்களைக் கொண்டு அவ்விருவருக்குள்ளும் ஏற்பட்ட விஷயங்கள் என்னவென்பதும் விளங்கும்; ஆனதால் அந்த பிரசங்கங்கள் ருஜூக்களாக அங்கீகரிக்கப்படலாம்.

ஷை எதிரிகளிருவருக்கும் விதித்த தெண்டனை ஜாஸ்தியானதென்று அவ்விருவருக்கும் 6 வருட தீபாந்திர தெண்டனையாக மாற்றிவிட்டார்கள்.

32 சென்னை 3 V. O. சிதம்பரம்பிள்ளை 2 எதிரி கி அப்பீல் 1908௵த்திய 491 சுப்பிரமணிய சிவா 1 எதிரி கி அப்பீல் 1908௵த்திய 503

4 அப்ரூவர்பேரில் நடவடிக்கைகள் நடத்த சாங்க்ஷன் பெறுதல்.

கடப்பா செஷன் கோர்ட்டில் நடந்த ஒரு கேசில் மடிகா நல்லவாடு என்றவர் அப்ரூவராக விசாரிக்கப்பட்டார். இவர் கீழ்கோர்ட்டில் கொடுத்த வாக்குமூலங்களுக்கு சிலது மாறாக செஷன் கோர்ட்டில் வாக்குமூலங் கொடுத்தார். அதன்பேரில் செஷன் ஜட்ஜி அவர்பேரில் எவ்விதமான நடவடிக்கைகள் நடத்தவேண்டுமென்பதை யறிவிக்கும்படி ஹைகோர்ட்டாரவர்களுக்கு எழுதினார்கள்.

ஷை மடிகாநல்லவாடு கீழ்கோர்ட்டிலொருவிதமாகவும் செஷன் கோர்ட்டில் வேறுவிதமாகவும் முன்னுக்குப்பின் விரோதமாக வாக்குமூலங் கொடுத்திருப்பதால் அவர் பொய்சாக்ஷியத்துக்காக தெண்டிக்கப்பட வேண்டியதென்றும் அதற்கு கி பு கோடு 339 (3) செக்ஷன்படி ஹைகோர்ட்டாரவர்களுடைய



சாங்க்ஷனை வேண்டியதவசியமென்றும் உத்திரவு செய்தார்கள். 32 சென்னை 47 சக்கரவர்த்தி, அ. வாதி மடிகா நல்லவாடு எதிரி.

5 சாக்ஷிகளை குறுக்கு விசாரணை செய்ய இடங்கொடாமல் மேல் கோர்ட்டுக்கு கமிட்செய்தல்.

ஜகாண்டர் பத்திராதிபரின்பேரில் இ பி கோடு 124 A செக்ஷன்படி இராஜதுரோகம் என்ற குற்றஞ்சாட்டி நடவடிக்கைகள் நடத்தப்பட்டன. அதில் வாதி திறப்பு சாக்ஷிகள் ஒவ்வொருவரும் விசாரிக்கப்பட்டவுடனே எதிரி அவர்களை குறுக்குவிசாரணை செய்யாமலேயிருந்து அந்த சாக்ஷிகள் எல்லோரும் விசாரிக்கப்பட்ட பிறகு அவர்கள் ஒவ்வொருவரையும் குறுக்குவிசாரணை செய்யவேண்டுமென்றும், அதன் பிறகு தங்கள் திறப்பு சாக்ஷிகள் விசாரிக்கப்பட வேண்டுமென்றும் ஷை கேசை பிரதம விசாரணை செய்த பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டை எதிரி கேட்டார்.

அதற்கு மாஜிஸ்டிரேட் வாதிதிறப்பில் அந்த சாக்ஷிகள் விசாரிக்கப்பட்டவுடனே அவர்களை குறுக்கு விசாரணை செய்யவேண்டியதேயன்றி அவர்கள் எல்லோரையும் வாதி விசாரித்த பிறகு எதிரி அவர்களை குறுக்கு விசாரணை செய்யும்படி இடங்கொடுக்க வேண்டியதவசியமில்லையென்றும், எதிரி திறப்பு சாக்ஷிகள் விசாரிக்கப்பட வேண்டியதில்லையென்றும் எதிரியின் கேட்டுக்கொள்ளுதலை நிராகரித்து விட்டார்கள்.

எதிரி திறப்பு சாக்ஷிகள் விசாரிக்கப்படாமலே அவரை ஹைகோர்ட்டுக்கு கமிட் செய்ததின்பேரில் இவ்விதஞ் செய்தது சட்டவிரோதமென்று எதிரி ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தார்.

உத்திரவு:—எதிரிதான் கேட்டுக்கொண்டபடி சாக்ஷிகளை விசாரிக்காதிருந்தது சட்டவிரோதமானதென்று தனக்கு ஆதாரமாக எடுத்துக்காட்டும் 21 கல்கத்தா 642, 20 அலகபாத் 264, 26 அலகபாத் 177 இந்த ரூலிங்கிஸ்கள் இந்த கேசுக்கு ஒற்றுமையானதல்லவென்றும், கி பு கோடு 206 செக்ஷனும் இதற்கு சம்பந்தமில்லையென்றும், இந்த கேஸ் பிரஸிடென்ஸி மாஜிஸ்ட்ரேட் கோர்ட்டாரவர்களுடைய பரிசீலனைக்கு வுட்படாததாகையால் அவர்கள் கி பு கோடு 317வது செக்ஷன்படி இந்த

கேசையுடனே ஹைகோர்ட்டுக்கு அனுப்பி விடவேண்டியதவசியமென்றும், வந்த திறப்பு சாக்ஷிகளை குறுக்கு விசாரணை செய்யும்படி இடங்கொடுக்க வேண்டியதவசியமில்லை யென்றும், எதிரியின் அப்பீல் தள்ளுபடி செய்யப்பட்டது.

36 கல்கத்தா 48 பனிண்டாநாத் மிட்ரா அ வாதி— சக்கிரவர்த்தி. அ பிரதிவாதி.

(6) சம்மரியாக விசாரித்து தீர்ப்பு செய்யக்கூடிய கேஸ்கள் இன்னவை யென்பது.

தர்பகங்கா முனிஸிபல் பட்டணத்தில் முனிசிபல்வரி செலுத்தக்கடமைப்பட்ட A அவ்வரியை செலுத்தாததால் அவருடைய ஜங்கம சொத்துக்களை முனிசிபாலிட்டி உத்தியோகஸ்தர் B ஜப்திசெய்தார். அதனால் A கோபங்கொண்டு தன்னுடைய வேலையாட்களைக் கொண்டு ஷை ஜப்தியை தடை செய்ததுமன்றி Bயை துர்பாஷைகளாக திட்டி அவரை அந்நியாயமாக பயமுறுத்தினர்.

அதனால் B நடந்த விஷயங்களைக்கண்டு இ பி கோடு 186, 504, 506 இந்த செக்ஷன்களின்படி A பேரில் குற்றஞ்சாட்டி முதலாவது மாஜிஸ்டிரேட்டா ரவர்களிடம் பிராது கொடுத்தார். அந்த பிராதின்பேரில் Bயிடம் உறுதிமொழி வாங்கப்பட்டதில் அந்நியாயமாக பயமுறுத்தல் என்னும் குற்றத்துக்கு வேண்டிய வாக்குமூலங் கொடுக்கவில்லை. அதனால் அக்குற்றத்தை நீக்கி மற்ற குற்றங்களின்பேரில் ஷை கேசை சம்மரியாக விசாரித்து தீர்ப்பு சொல்லிவிட்டார்கள்.

Bயுடைய பிராது இ. பி. கோடு 506வது. செக்ஷன்படிக்கும் கொடுபட்டிருப்பதால் ஷை கேஸ் சம்மரியாக விசாரிக்கப்பட்டது சட்டவிரோதமானதென்று A செஷன் கோர்ட்டில் அப்பீல் மனுக்கொடுத்தார். இது விஷயத்தைப்பற்றி செஷன் ஜட்ஜியவர்களுக்கு சந்தேகமுண்டாகி கி பு கோடு 438வது செக்ஷன்படி ஹைகோர்ட்டுக்கு இதைப்பற்றி ரிபோர்ட்டு செய்தார்கள்.

உத்திரவு:— எதிரிகள் பேரில் இ பி கோடு 506வது செக்ஷன்படி குற்றஞ்சாட்டி பிராது கொடுத்திருப்பதுமட்டில் போதுமானதல்லவென்றும், ஒவ்வொரு கேசிலும் மேற்படக்கூடிய குற்றங்க



ளின்னவை யென்த் தெரிந்துகொள்ள விரும்பினால் பிராது உறுதிமொழி இவ்விரண்டையுஞ் சேர்த்துப் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டுமென்றும், பிராதில்கண்ட 506வது செக்ஷன் குற்றம் உறுதிமொழி ஸ்டேட்மெண்டில் சொல்லப்படாததால் மற்ற குற்றங்களைப்பற்றி சம்மரியாக விசாரித்து தீர்ப்பு செய்ய முதலாவது வகுப்பு மாஜிஸ்டிரேட்டுக்கு அதிகாரமிருக்கிறதென்றும், உத்திரவு செய்யப்பட்டது.

36 கல்கத்தா 67 பனிண்டாநாத் சட்டார் ஜி. ஆ. வாதி— சக்கரவர்த்தி அ. பிரதிவாதி.

(7) சட்டவிரோதமாக சாங்கிஷன் கொடுத்தல்.

A என்பவர் இ பி கோடு 333வது செக்ஷன்படி B பேரில் குற்றஞ்சாட்டி ஸீனியர் பிரசிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாரவர்களிடம் பிராதுகொடுத்தார். அந்தக்கேசை யவர்கள் தனக்கு கீழ்ப்பட்ட ஜூனியர் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் விசாரிக்கும்படியாக பிராதை யனுப்பிவிட்டார்கள். அவர்களந்தப்படி கேசை பயிலில் வைத்துக்கொண்டு சாக்ஷி விசாரணை செய்ததில் பிராதில்கண்ட விஷயங்கள் பொய்யென்று கண்டுபிடித்து பிராதை தள்ளுபடி செய்ததுமன்றி வாதி பொய் பிராது கொண்டுவந்ததற்காக அவர் பேரில் இ பி கோடு 211வது செக்ஷன்படி நடவடிக்கைகள் நடத்தப்பட வேண்டுமென்று புரிஸீடிங்கில் எழுதி அதை ஸீனியர் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட்டாரவர்களிடம் அனுப்பிவிட்டார்கள். அவர்கள் அந்த ரிகார்டுகளை பார்வையிட்டு இ பி கோடு 211வது செக்ஷன்படி A பேரில் நடவடிக்கைகள் நடத்தவேண்டியதாக சாங்கிஷன் கொடுத்து விட்டார்கள்.

இந்த கேஸ் விஷயமாக ஸீனியர் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் எவ்வித சாக்ஷி விசாரணையுஞ் செய்யாததினால் கி பு கோடு 4[illegible] M செக்ஷன்படி அவர்கள் செய்த வுத்திரவு ஜூடிஷல் புரிஸீடிங்கிஸ் ஆகமாட்டாதென்றும், அவர்கள் சாங்கிஷன் கொடுத்தது சட்டவிரோதமானதென்றும், A ஹைகோர்ட்டில் அப்பீல் செய்தார்.

கி பு கோடு 476வது செக்ஷன்படி ஸீனியர் பிரஸிடென்ஸி மாஜிஸ்டிரேட் சாங்கிஷன் கொடுக்க அதிகாரமுண்டென்று தீர்மான

34

ஞ்செய்யப்பட்டது. 36 கல்கத்தா 72 கஞ்சன் கோவிந் அ. வாதி—
ராமகிஷன் நண்டல் அ. பிரதிவாதி.

கீழ்கோர்ட்டார் செய்த தீர்ப்பின் பேரில் அப்பீல் கோர்ட்டார் நல்நட
த்தைக்கு ஜாமீன் வாங்குவது.

A B வு நேர்கள் பேரில் இ பி கோடு 147, 323, 325
இந்த செக்ஷன்களின்படி நடவடிக்கைகள் நடத்தப்பட்டதில் அவர்
களில் சிலர் இ பி கோடு 147 323 இந்த செக்ஷன்களின்படி தெ
ண்டிக்கப்பட்டார்கள். இவ்விதந் தெண்டனையடைந்த A B இரு
வரும் தாங்கள் குற்றவாளியல்லவென்றும், தங்களுக்கு விதித்த
தெண்டனையை ரத்து செய்யவேண்டுமென்றும், அப்பீல் செய்த
தில் அப்பீல் கோர்ட்டார் A B இருவர்பேரிலும் இ பி கோடு
147 வது செக்ஷன்படி ஏற்பட்ட குற்றத்தை மட்டில் ரத்து செ
ய்தும், 323 செக்ஷன்படி ஏற்பட்ட குற்றத்தை யுறுதி செய்தும்
தீர்ப்பு செய்தது மன்றி கி பு கோடு 106 வது செக்ஷன்படி
A B இருவரிடத்திலும் நல்நடத்தைக்கு ஜாமீன் வாங்கவேண்
டுமென உத்திரவு செய்தார்கள்.

கீழ்கோர்ட்டார் செய்த தீர்ப்பின்பேரில் அப்பீல் செய்து
கொண்டால் சாதகங்கள் செய்யவேண்டுமேயன்றி பாதகங்கள்
செய்வது சட்டவிரோதமென்றும், கி பு கோடு 106 வது செக்
ஷன்படி ஜாமீன் வாங்கச் செய்தது நியாயமானதல்ல வென்றும்
அப்பீல்செய்தார்கள்.

அப்பீல் கோர்ட்டாருக்கு இது விஷயமாய் சட்டதாத்பரிய
மான சந்தேகங்களுண்டாகி ஹைகோர்ட்டுக்கு ரிபோர்ட்டு செய்
தார்கள்.

அப்பீல் கோர்ட்டார் கேஸை கேசைப்பற்றி பிரதமவிசாரணை
செய்யாவிட்டாலும் அப்பீல் விசாரணை நடத்தியிருப்பதால் எதி
ரிகளிடத்தில் கி பு கோடு 106 வது செக்ஷன்படி ஜாமீன் வா
ங்கும்படி உத்திரவு செய்ய அவர்களுக்கு அதிகாரமிருக்கிற தெ
ன்று உத்திரவு செய்தார்கள்.

33 பம்பாய் 33 சக்கரவர்த்தி அ வாதி — பான்சிங்மோல்
சிங் அ பிரதிவாதிகள்.

35

லேபிள் ஒட்டாமல் ரசீது கொடுப்பதற்கு தெண்டனை

A தனக்கு B யால் சேரவேண்டியிருந்த குத்தகைத் தொகை
க்காக வழக்கிட்டு டிக்கிரி பெற்றிருந்தார். அந்த டிக்கிரித் தொ
கையை B யிடமிருந்து பெற்றுக்கொண்டதற்கு A ஒரு ரசீது
கொடுத்தார். அத்தொகை இருபது ரூபாய்க்கு மேற்பட்டிருந்தும்
லேபிள் ஒட்டி கையெழுத்து செய்யப்படவில்லை; அந்த ரசீது
கோர்ட்டில் தாகல் செய்யப்பட்டது. சட்டவிரோதமாக ஸ்டாம
பு வொட்டாமல் கையெழுத்து செய்து ரசீது கொடுத்ததால் A
பேரில் இந்தியன் ஸ்டாம்பு ஆகட்டு 62வது செக்ஷன்படி நட
வடிக்கைகள் நடத்தி ரூ 40 அவருக்கு அபராதம் விதித்தார்கள்

குத்தகைத் தொகைக்காக கொடுபடும் ரசீதுகளுக்கு லேபி
ள்கள் ஒட்டப்படவேண்டிய தவசியமில்லையென்று கெ ஸ்டாம்பு
ஆகட்டு 53 C செக்ஷனில் சொல்லப்பட்டிருப்பதால் தனக்கு அப
ராதம் விதித்தது சட்டவிரோதமானதென்று A ஹைகோர்ட்டில்
ரிவிஷன் மனுக் கொடுத்தார்.

தீர்ப்பு:—மேற்கண்ட 53 C செக்ஷன் குத்தகைத் தொகை
வசூல் சம்பந்தமான ரசீதுகளுக்குச் சொல்லப்பட்டதேயன்றி அ
த்தொகை பாக்கித்தால் ஏற்பட்ட டிக்கிரித் தொகைகள் சம்பந்த
ப்பட்டதற்கல்லவென்றும், Aக்கு அபதாரம் விதித்தது சட்டவி
ரோதமானதல்லவென்றும், இந்த கேஸ் சட்டதாத்பரியம் சந்தே
காஸ்பதமானதாக விருந்ததால் Aக்கு விதித்த அபதாரத்தில்
பெரும்பாகம் குறைக்கப்பட்டது. 31 அலகாபாத் 36.

10. ஆக்கிரமித்து கட்டிக்கொண்ட சொத்து யார்வசம் ஒப்புவிக்க
படவேண்டுமென்பது.

A என்பவருக்கு ஒரு கிராமத்தில் $\frac{5}{6}$ பாகமிருந்தது; மற்ற
$\frac{1}{6}$ பாகத்தை அந்தபாகஸ்தர்களிடமிருந்து B நீண்டகால குத்த
கைக்கு வாங்கியிருந்தார். Bதான் குத்தகைக்குக் வாங்கிய சொத்து
களை யனுபவிப்பதில் பலவித அசவுகரியங்க ளிருந்ததால் Aயின்
சொத்தையும் குத்தகைக்கு கேட்டார். B கேட்டுக் கொண்ட

டி A அவர்பாக சொத்துக்களை கொடாதபடியால் அவருடைய சொத்துக்களை B ஆ ஆக்கிரமித்துக் கட்டிக்கொண்டது மன்றி A யின் கட்டடத்திலிருந்த சொத்துக்களையுங் கொள்ளை யடித்துக்கொண்டு போய்விட்டார்கள்.

இ. பி. கோடு 147வது செக்ஷன்படி B ஆ பேரில் குற்றஞ்சாட்டி விசாரித்ததில் சில எதிரிகள் இ. பி. கோடு 323வது குற்றம் செய்ததாக தெண்டிக்கப்பட்டார்கள். கொள்ளையடித்துப் போய்விட்டதாய்ச் சொன்ன சொத்துக்கள் யாருக்குச் சொந்தமென்று தீர்ப்பில் சொல்லப்படவில்லை. அதனால் B அச்சொத்துக்கள் தன்வசம் ஒப்புவிக்கப்பட வேண்டுமென்று மாஜிஸ்டிரேட் கோர்ட்டாரவர்களிடம் மனுக்கொடுத்ததில் அந்தப்படி அவரிடங்கொடுத்து விடும்படி உத்திரவு செய்துவிட்டார்கள்.

இவ்விதம் உத்திரவு செய்தது சட்டவிரோதமானதென்று A ஹைகோர்ட்டில் கி. பு. கோடு 439வது செக்ஷன்படி ரெவிஷன் மனுக்கொடுத்தார்.

கி. பு. கோடு 517, 522வது செக்ஷன்களின்படி சொத்துக்கள் ஸ்வாதீன விஷயமாக உத்திரவு செய்ய சம்பந்தப்பட்ட மாஜிஸ்டிரேட் கோர்ட்டார்களுக்கு அதிகாரமிருக்கிறதே யன்றி அந்த விஷயமாக ஹைகோர்ட்டாரவர்கள் உத்திரவு செய்ய அவர்களுக்கு அதிகாரமில்லையென்பதாக B ஆ வாதாடினார்கள்.

உத்திரவு:—கீழ்க் கோர்ட்டாரவர்கள் சட்ட விரோதமாகவும் நியாய விரோதமாகவும் நடவடிக்கைகள் நடத்தினால் அவைகளை ரத்துசெய்ய ஹைகோர்ட்டாரவர்களுக்கு அதிகாரமிருக்கிறதென்று 27 அலகபாத் 415 ரூலிங்கினை யனுசரித்து கீழ்கோர்ட்டார் செய்த உத்திரவை ரத்துசெய்து தாவாவிற்கண்ட சொத்துக்களை A வசம் ஒப்புவிக்கும்படி உத்திரவு செய்தார்கள்.

36 கல்கத்தா 44 ஆமத்அலி அ. வாதி—கிஙுக்கன் அ. பிரதிவாதி.

**11 வக்கீல்பேரில் புகார்செய்த கக்ஷிக்காரரை தெண்டிக்க சாங்கிஷன் கொடுத்தல்.**

A என்ற மகம்பதிய ஸ்திரீ தனக்குடவர் தொகை கிடைக்க



வேண்டுமென்று வழக்கிட்டு டிக்கிரி பெற்றிருந்தாள். அந்த டிக்கிரி நிறைவேறு நடவடிக்கையில் A யுடைய வக்கீல் B யால் ஒரு ராஜினாமா கோர்ட்டில் தாகல் செய்யப்பட்டது. அந்த ராஜினாமா தன்னுடைய சம்மதி யன்னியில் தன்னுடைய வக்கீல் கோர்ட்டில் தாகல் செய்துவிட்டதாக A அந்நடவடிக்கைகள் நடந்த சப்கோர்ட்டிலும் டிஸ்டிரிக்ட் கோர்ட்டிலும், ஹைகோர்ட்டிலும் B பேரில புகார் மனுக்கொடுத்தாள். சப்கோர்ட்டார் அந்த புகார் மனுவைப்பற்றி விசாரிக்காமலே ராஜினாமாப்படி உத்திரவு செய்துவிட்டார்கள். ஹைகோர்ட்டாரிடம் A கொடுத்த மனுவைப்பற்றி விசாரித்துத் தெரிவிக்கும்படி அம்மனு சப்கோர்ட்டுக்கு அனுப்பப்பட்டது. லீகல் பிராக்டிஷனர் ஆக்டுப்படி வக்கீலின் நடவடிக்கைகளைப் பற்றி சப்ஜட்ஜி விசாரித்தார்கள். அவ்விசாரணையில் A சாக்ஷியாக விசாரிக்கப்பட்டதில் அவள் சொல்லியது பொய்யென்று ருஜுக்கள் ஏற்பட்டன. அதனால் அவளை பொய்ப் பிரமாணத்துக்கு தெண்டிக்க சப்ஜட்ஜி சாங்கிஷன் கொடுத்துவிட்டார். அதைப்பற்றி A டிஸ்டிரிக்ட் கோர்ட்டில் அப்பீல் செய்ததில் சப்கோர்ட்டார் கொடுத்த சாங்கிஷன் உறுதி செய்யப்பட்டது. அதன்பேரில் A கி. பு. கோடு 439வது செக்ஷன்படி ஹைகோர்ட்டில் ரெவிஷன் மனுக்கொடுத்தாள்.

உத்திரவு:—A தன்பேரில் விரோதமான உத்திரவு செய்ததைப்பற்றி கி. பு. கோடு 622வது செக்ஷன்படி ரெவிஷன் மனுக்கொடுத்திருக்கவேண்டியதென்றும், அந்தப்படி மனுக்கொடுக்காமல் கி. பு. கோடு 439 வது செக்ஷன்படி மனுக்கொடுத்திருப்பதால் கீழ் கோர்ட்டார் செய்த உத்திரவை மாற்ற தங்களுக்கு அதிகாரமில்லையென்று A யின் மனு தள்ளுபடி செய்யப்பட்டது.

31 அலகபாத் 38 பாஜா நலன், அ. வாதி—சைத்ஹஸன் அ. பிரதிவாதி.

## இந்தியன் லா ரிப்போர்ட்டுகள்.

ஓர் மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகை.

இதில் ஜனவரி 1909ளு முதல் இந்தியாவிலுள்ள சென்னை, கல்கத்தா, பம்பாய், அலகபாத், இந்த நான்கு ஹைகோர்ட்டுகளிலும் பிரிவிகவுன்சிலிலும் ஏற்படும் லா ரிபோர்ட்டுகளை இந்துலா, [illegible], [illegible], ரெவின்யு, சிவில் புரிஸீஜர்கோடு, காலாவதிதோஷ சட்டம், சொத்துப்பாத்தியச் சட்டம், சாக்ஷியசட்டம், காண்டிராக்ட் ஆக்ட், வசதிபாத்திய சட்டம், [illegible] ஆக்ட், ரிஜிஸ்டிரேஷனாக்ட், இந்தியன் பெனல்கோட், கிரிமினல் புரிஸீஜர்கோடு முதலியபலவகைச் சட்டங்களையும் [illegible] விஷயங்களின் சாராம்சங்களை யாவரும் தெளிவாய்த் தெரிந்துகொள்ளும்படி தமிழில் எழுதப்படும்.

வருடசந்தா ரூபா. 3 0 0

[illegible] சந்தாதாரர்களுக்கு முதல் 6-மாதங்களுக்குப் புஸ்தகம் அனுப்பப்படும்.

## ஸ்ரீமத்பாகவதம் தசமஸ்கந்தம்.

இக்கிரந்தம் பெரிய கிரந்தலிபியில் மூலத்துடனும் [illegible] தமிழ் லிபியில் ஸ்ரீதர வ்யாக்யானத்துடனும் மூலத்திற்குச் சரியாக [illegible] சுலோகத்திற்கும் தமிழ் அர்த்தத்துடனும் ராயல் 10-பாரம் 80 பக்கங்கள் கொண்ட ஸஞ்சிகையாக வெளியாகி வருகிறது.

மூன்று ஸஞ்சிகைக்கு வெபி.செலவு உள்பட 1 3 0
ஸஞ்சிகை 1க்கு 0 7 0

விலாஸம்:— S. ராஜாசாஸ்திரி
"வாணீபூஷணம்" பிரஸ்
திருவல்லிக்கேணி.

இனம்! இனம்!

## லோகோபகாரி பத்திரிகை.

சென்ற பதினைந்து வருஷமாய் நம்தமிழ் நாடெங்கும் செழித்தோங்கி பிரதி வெள்ளிக்கிழமையும் பிரசுரமாகும் அருமையான பத்திரிகை. தமிழ் நாட்டிலுள்ள ஸ்திரீ புருஷர் ஒவ்வொருவரும் படித்து அஞ்ஞான இருளொழிக்கும் பொருட்டு கல்வியில் மிகவு பாண்டித்யமுள்ளவரும் சிதம்பரத்தில் நடந்துவந்த பிரம்மவித்யா பத்திரிகைக்கு உபபத்திராசிரியராயிருந்து தற்காலம் சென்னை வெஸ்லி மிஷின் ஹைஸ்கூல் தமிழ் பண்டிதராகவுமிருக்கிற ம-கா-ள-ஸ்ரீ ஏ-கிருஷ்ணய்யர் அவர்களைக் கொண்டு நடத்தப்படுகிறது.

இப்பத்திரிகை வேண்டுவோர் அடியிற்கண்ட விலாஸத்திற்கு எழுதிக்கொண்டால் வருஷசந்தா ரூபாய் 3 4 0 க்கு விஜயலக்ஷ்மி யென்னும் இனம் புஸ்தகத்தை உருதிமொழிச்சீட்டுடன் வி-பி மூலமாக வசூல் செய்து ஒரு வருஷமுழுதுய பத்திரிகை அனுப்பப்படும்.

மானேஜர்
"லோகோபகாரி ஆபீஸ்" திருவல்லிக்கேணி சென்னை.

389